[illegible]
11,[illegible] 28K.[illegible]
[illegible] 34.[illegible]
99157

KALANILAYAM

தனிப்பிரதி விலை அணா 0-2-6.

# கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

உள் நாடு—வருஷ சந்தா ரூ. 7 0 0

புற நாடு—வருஷ சந்தா ரூ. 9 0 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

6- JUN 1934
MADRAS

Vol 7] 1934 ஹு பிப்ரவரி மீ 15உ [No. 7

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 97
2. அப்பர் (64 கலை-இதிகாசம்-கந்தன் சரிதை) E. N. தணிகாசல முதலியார், B.A.B.L. 99
3. தமிழ்ப் பாடம் வில்லிபாரதம்--கிருஷ்ணன் தூதுச் சருக்கம் 100
4. கம்பராமாயணம்—(அறமப் படலம்) T. N. சேஷாசலம் B.A.B.L. 102
5. சூளாமணி—(நகரச் சருக்கம்) வித்வான் T.P. மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை, M.A.B.L. 105
6. ஷேக்ஸ்ப்பியர் நாடகக் காட்சித்திரட்டு (ஜான் அரசன்) T. S. நடராஜப்பிள்ளை B.A.B.L. 107
7. ஸ்ரீ தியாகராஜ கீர்த்தன மணிமாலை (வநஜநடனுடனி) P. B. ஸ்ரீநிவாசாச்சாரியார், B. A. 109
8. மதுரைக் கோவை. (குறையுற வுணர்தல்) S. வையாபுரிப் பிள்ளை, B.A.B.L. 110
9. கல்வியில்லாக் குறை (ஒரு சிறு கதை) K. S. முத்துராமலிங்கம், M.A. 111
10. வர்த்தமானம் 112

## கலாநிலயம்

### உண்மையே உண்மை யம்மா 4.

மாநடவாழ்க்கை மண்டுகின்றநெறிகண்டு மதியுடையோர் மாழ்குதல் வேண்டும். முன்னே முன்னே இவ்விதழ்களின் பற்பலவிடங்களில் யாம் வற்புறுத்தியவண்ணம், மனிதருடைய மனநிலையின் தன்மையை ஐயமற ஓர்ந்துகொண்ட பின்னரே, எவ்வகையிலும் சீர்திருத்தம் என்ற யாதும் பேசப் பயனுளது. மனத்தின் எண்ணங்கள் முற்றிலும் வேறுக மாறுதவரையில்வெளியினின்று செய்துவைப்பனவெல்லாம், அவ்வாறு செய்ய முயல்வோர்தம் அன்பினை ஒருவாறு காட்டுவதாயின் காட்டலாமேயன்றி, நற்பயன் யாதும் விளைவதற்கோ ஒருபோதும்ஆதாரமாகுமென்று கனவிலே கொண்டாலும், அத்தனையும், நன்மைக்கு எதிர்முகமாய்த் தாமும்நடந்து மற்றவர்களையும் நடத்துகின்ற கொள்கையாய் முடியும்.

மனத்தினைப் பண்செய்துகொள்ளாமல் மற்றவெல்லாம் பற்றிப்பற்றித் திரிந்து மாந்தர்தம் வாழ்க்கையை உலகடங்கலும் எத்தனை அவலமாக்கிக் கொண்டிருக்கின்றனர் என்பதை எண்ணிப் பார்க்கும் திறமையேனும் வேண்டுமென்று விரும்பாதவர்களை என்னசொல்லிமதிப்பதென்று எமக்குச்சற்றேனும்தெரியவில்லை. ‘உலகடங்கலும்'' அவ்வாறே ஆகியிருக்கின்றதென்பதைத் தெரிந்துகொள்ளமாட்டாதவரை எவ்வகைமக்களோடுசேர்த்துநினைப்பதென்பதையும் அறிகிலோம். மற்றையநாட்டினர் பற்பல கருமங்கள்முயன்று முன்னேற்றம் அமடைந்திருப்பதால் அவர்தாம் நல்வாழ்வு வாழவல்லவர்களா யிருக்கின்றாரென்னும் ஒருசொல் [illegible], எல்லார்நாவிலும் நடமா[illegible]. வேறொன்றும் [illegible]யக்கவில்லையேனும், இவ்[illegible]ரு பொய்யெண்ண[illegible] அதன்ன்று பிறக்கின்ற வீண்சொற்களும் ஒழியுமாயின், மெய்ந்நெறி நன்மையை நாடுவோர்க்குப் பகையாய் வந்து வழியெல்லாம் கிடக்கின்ற எண்ணிறந்த பற்பலஇடையூறுகளிற் பெரும்பகுதி நீங்குமெனக்கூறலாம். மனமென்பது எங்கும் ஒன்றே. மனத்தைப் பற்றியதேயன்றி வாழ்வானது மற்றெதையும் பற்றியதன்று. ஆதலினால், மனத்தின் மேன்மைக்கு மதிப்பும் ஆதாரமும் அமையாத இடங்களில்எல்லாம்அவலமாயவாழ்வின்செய்திஒருபடித்தாகவே தீர்தல்வேண்டும்; இதனில் யாதும் ஐயமிருக்க வழியில்லையே. மேல்நாடுகளில் முழங்குகின்ற வாழ்க்கை,ஆதலின்,இன்றுஇவ்விந்தியநாட்டின்வாழ்க்கைக்கு எவ்விதத்திலும் உயர்ந்ததுமில்லை, தாழ்ந்ததுமில்லை. பொதுவுறப் பேசுமிடத்து, பொய்வாழ்க்கை வாழ்ந்து அழிந்த சிந்தையராய் அல்லலுறுகின்ற தன்மையில் ஒருவருக்கொருவர் கூசவும்வேண்டா, ஏசவும்வேண்டா. “நாங்கள் எல்லோரும் தீண்டத்தகாத பாவிகளே ஆயினோமே'' என்று மாத்யூ ஆர்னல்ட் என்னும்ஆங்கில ஆசிரியர் முறையிடுவதும், “நாங்கள் விலங்குகள் அல்ல; அவைகளினும் கேடுகெட்டவை''என்று ஜான் கூடர் பாய்ஸ் என்னும் அமரிக்க ஆசிரியர் இழிவுறக் கூறுவதும், “நாங்கள் முன்னேறிச் சென்றநெறியெல்லாம், மற்றவரை மிதித்து மிதித்து நசுக்கிய இரத்தச்சுவடுகளைஎங்கும் காணலேமே.'' என்று எலிஸபெத் பார்ரேட் ப்ரௌனிங் என்னும் ஆங்கிலஅம்மையார் ஒருவர் ஏங்குவதும், இன்னும் இவை போன்ற பல,மேனாட்டு வாழ்க்கையைப்பற்றி மேனாட்டு அறிஞர்களே கொண்டுள்ள கருத்துக்களையும் இவ்விதழ்களின் பலவிடங்களில் வரைந்து காட்டியுள்ளோம். இவைகளை எத்தனைமுறை வரைந்தாலும் ஓதினாலும் நினைத்

தானும் மிகை அன்று. மற்று, மெய்பாய நன்மையை நினைக்கத்தானும் திறனழிந்து, தீமையுந் துன்பமுமே தன் பிறவிக்கடன் என்று கிடக்கவேண்டி நேர்ந்துவிட்ட மானுடவாழ்க்கையின் நிலைமையோ மிகமிகக்கொடிது. அதனை அறிவுறுத்துமாறு, ஆஸ்க்கார் வைல்ட் என்பவர் தமக்கேயுரிய வோர் இணையிலா வகையில் வரைந்துள்ள உதாரணச்கதை ஒன்று, உய்யநினைப்போர் இதயங்களிலெல்லாந் தங்கியிருக்கத்தக்கது:—

* * *

"எங்கும் அமைதியாயிருந்தது; யாரும் பேசவில்லை. கடவுளின் முன்னே மனிதன் நிர்வாணமாய் வந்து நின்றான். அம்மனிதனது வாழ்நாட் சரிதைப் புத்தகத்தைத் திறந்தார் கடவுள்.

திறந்து அம்மனிதனைப் பார்த்து, "உன் வாழ்நாள் எல்லாம் தீமையே செய்தனை! உன்னுடைய உதவியை வேண்டி நின்றவர்களுக்கு நீ கொடுமையே செய்தாய்; ஒருவருக்கும் உபகாரம் செய்யாவகை உன்னுடைய இதயத்தைக் கல்லாக்கிக்கொண்டாய். ஏழைகள் உன்னைக் கூவி அழைத்தனர், நீயோ செவிகொடுக்கவில்லை. துன்பமுடையோர், கதறிய அழுகை உன் காதுகளிற் படாதபடி அடைத்துக் கொண்டாய். அநாதைகளின் ஆஸ்த்தியை எல்லாம் நீயே அபகரித்துக்கொண்டுவிட்டாய். அயலார் தோட்டங்களை எல்லாம் அழித்தாய். வறியோரையும் பிணியாளரையும், உன் மனைக்கருகு அண்டவொட்டாமல் தெருவிலே துரத்தியடித்தாய். என்னுடைய பூமியின்மீது நிரபராதிகளின் இரத்தத்தைச் சிந்தினுய்" என்றனர்.

"அப்படித்தான் செய்தேன்" என்று மறுமொழி கூறினுன் மனிதன்.

"மறுபடியும் கடவுள் அவன் வாழ்நாட்சரிதைப் புத்தகத்தைத் திறந்து, "உன் வாழ்நாளெல்லாந் தீமையே செய்தனை! அழகு வேண்டுமென்று நீ தேடினுய், உண்மையான அழகை நான் உனக்குக் காட்டினேன், எனினும் நீ அதனைக் கண்ணெடுத்தும் பார்க்கவில்லை. நான் உன் வழியிலே மறைத்துவைத்திருந்த நன்மையை நீ கடந்து நடந்துவிட்டாய். தின்னத் தகாதனவற்றைத் தின்றாய். காமக்கிழத்தியர் முயக்கத்தில் நீ முழுகிக்கிடந்தாய். பகலெல்லாம் நீ மானமில்லா ஈனன்; இரவெல்லாம் நீ மதியில்லா மூர்க்கன்"—என்றனர்.

"அப்படித்தான் செய்தேன்" என்று மறுமொழி கூறினுன் மனிதன்.

"மூன்றுமுறை, அம்மனிதனின் வாழ்நாட்சரிதைப் புத்தகத்தைத் திறந்தார் கடவுள். திறந்து, "உன் வாழ்நாளெல்லாந் தீமையே செய்தனை. நன்மைக்கு மாருக நீ செய்தது தீமையே. அன்பிற்கு மாருக நீ செய்தது துன்பமே. உனக்கு உணவூட்டிய கையைப் புண்செய்தனை. உனக்குப் பாலூட்டிய முலையை இகழ்ந்தனை. உனக்குத் தண்ணீர் கொணர்ந்தவன் தாகமுடன் சென்றான். உன்னைத் தஞ்சமெனக் கொண்டவர்களைவஞ்சித்து அழித்தாய். உனக்கு உயிர்ப்பிச்சை தந்தவனை நீ காத்துநின்று கொன்றாய். உன்னேடு நட்புப்பூண்டவர்களை நீ விற்றுத் தின்றுவிட்டாய். உன்பால் காதல் கூர்ந்த மாதரை நீ காட்டிக்கொடுத்துவிட்டாய்" என்றார்.

"அப்படியுந்தான் செய்தேன்" என்று மறுமொழி கூறினுன் மனிதன்.

மனிதனது வாழ்நாட் சரிதைப் புத்தகத்தை மூடிவிட்டு, கடவுள் அவனைநோக்கி, "உன்னை நரகத்திற்கு அனுப்புவேன். நரகத்திற்கே உன்னை அனுப்புவேன் நான்" என்று சாற்றினர்.

"உன்னல் அது முடியாது" எனக் கதறினுன் மனிதன்.

"உன்னை நான் நரகத்திற்கு ஏன் அனுப்ப முடியாது, காரணந்தான் என்ன?" என்றுவினவினுர்கடவுள்.

"ஏனெனில், இதுகாறும் நான் வசித்திருந்ததெல்லாம் நரகத்திலே தானே", என்று மனிதன் கூறினுன்.

இதுகேட்ட அனைவரும் யாதும் பேசாமல் நிச்சப்தமாயிருந்தனர். சிறிதுநேரம் கழித்து, "உன்னைநான் நரகத்திற்கு அனுப்பமாட்டாமை விளங்குகின்றது. எனின், உன்னை நான் சுவர்க்கத்திற்கு அனுப்புவேன் நிச்சயம். உன்னைச் சுவர்க்கத்திற்கே அனுப்புவேன் நான்" என்றனர் கடவுள்.

"உன்னல் அது முடியாது" என்று மீண்டுங் கதறினுன் மனிதன்.

"உன்னை ஏன் நான் சுவர்க்கத்திற்கு அனுப்பமுடியாது, காரணந்தான்என்ன" என்றுகடவுள்கேட்டார்.

"ஏனெனில், எக்காலத்திலும் எவ்விடத்திலும் சுவர்க்கம்என்றுஒன்றினை மனதினுலும் என்னல் சிந்திக்க இயன்றதில்லை" என்று மறுமொழி கூறினுன் மனிதன்.

ஒருவரும் வாய்திறக்கவில்லை.

* * *

"இருப்பதே நரகமாதலின் இனிச் செல்வதற்கு வேறோர் நரகம் இல்லையெனும் துணிவினுல் நரகபயம் நீங்கி நிற்கின்ற மனிதனே, நீ வல்லன்" என ஆஸ்கார் வைல்ட் இச்சிறுகதையில் பரிகசம்செய்கின்றார் அல்லர். பரிவினுல் உருகுகின்ற ஓர் உள்ளத்தின் உரைகள் அவை. மெய்யாயவொருஅழகையும் நன்மையையும் கடவுள் காட்டுகின்றாராலும், மானமும் மதியும் அற்றவனுகிய மனிதன், அவைகளைக கடந்துசென்று தானுகத் தனக்காகத் தேடிக்கொள்ளும் அழகினுலும் செய்துகொள்ளும் நன்மையாலும் அன்றே இன்று நகரங்களெல்லாம் நரகங்கள் ஆகிவிடுகின்றன. நரகக் குடிவாழ்க்கையே நமக்கிட்ட கடன் என்று கிடப்பதனினுங் கொடியது மெய்ந்நெறி நன்மையின் இன்பத்தைச் சிந்திக்கவுமாட்டாததோர் நிலைமை. அந்தப் புன்மையுள்மனிதன் இன்று புகுந்திருக்கின்றான்என்பார் ஆஸ்கார் வைல்ட். இது உண்மையோ உண்மையன்றோ என்பதற்கு அவரவர் நெஞ்சே கரி.

நம்மைச் சூழ்ந்திருக்கின்ற உலகம் நம்மை எவ்வளவு அழுத்தினுலும், நம்மைச்சூழ்ந்திருக்கின்ற உலகத்தை நாம் எவ்வளவுஅழுத்தினுலும், நாம் செய்வதெல்லாந் தீமையேயாயினும், நமக்குச் செய்யப்படுவதெல்லாந் தீமையேயாயினும், வறுமையே வாட்டினுலும் அல்லது செல்வமே வந்து சீரழித்தாலும், நீதி இன்னதென்று தெரியாமற் செய்யப்படுகின்ற அநீதிகளும் அநீதியை விலக்குவதாகக் கருதிச் செய்யப்படுகின்ற அநீதிகளும்எவ்வளவேயாயினும், இவையெல்லாங்கிடக்க, இவைகளுக்கிடையேயும் மெய்யாய நன்மையும் இன்பமும் இன்னவாறு இருக்கும்எனச் சிந்திக்கவேனும் மானுட மனம் பயின்றிருக்குமாயின், "மனிதா, உன்னை நரகத்திற்கு அனுப்பமாட்டாமையால், நிச்சயம் இனி, சுவர்க்கத்திற்கே அனுப்புவேன்" என்று ஓர் கடவுள் உரைக்கும்படி நேர்கின்றபோதேனும், "ஏ, கடவுளே, அதுவும் முடியாதுகாண், உன்னல்" என்ன விளம்பவேண்டாதவோர் இலாபம் வாய்க்குமே. வாழ்வதே நரகமென்ற துணிவும், சுவர்க்கமோ யாதென்று நினைக்கவும் மாட்டாத எளிமையும் சேர்ந்திருக்கின்ற மனிதன [illegible] செய்யாமல் மற்றபடி [illegible] வீட்டை எண்ணையால் [illegible]ப்பதுபோலி[illegible] மையே உண்மை.

199127



# அப்பர்

## அப்பரும் அறுபத்து நான்கு கலைகளும்.—31. இதிகாசம்

[95-வது பக்கத் தொடர்ச்சி]

4\. கந்தன் உருவ தத்துவமும் அருவ தத்துவமும்

இவ்வாறு அடியார்களின் இருதயத்தில் விளங்கும் முருகனது திருஉருவம் கோடி சூரியப் பிரகாசமுடைய மூர்த்தியாயினும் சந்திரனைக்காட்டிலும் பல்லாயிரமடங்கு குளிர்ந்ததோர் தன்மையாகி இருக்கின்றது. ஒருதினத்தில் சூரியோதயத்தின் முன்னர் விடியற்காலத்தைத் தெரிவிக்கின்ற சஞ்சீவிக் காற்றென்னும் (Nascent Oxygen) பிராணவாயு அடிக்க ஆரம்பிக்கும் சமயத்தில் (அதாவது சேவல் கூவும்பொழுதில்) எத்தகைய குளிர்ச்சியுண்டாகின்றதோ அதுபோலவும், மற்றும் கொம்பனைய மடவாளுடன் இனிதமருங் காலத்தில் எத்தகைய குளிர்ச்சியுண்டோ அதனைப்போலவும் இன்பத்தைத் தருகின்ற இம்மூர்த்தி, தனது ஒப்பிலாத் தன்மையை விளக்கவே சேவலைக் கொடியாய்ப் பெற்றார்போலும்:

கோழிக் கொடியோன் தாதை போலும்
கொம்பனாள் பாகங் குளிர்ந்தார் போலும்
ஊழி முதல்வருந் தாமே போலும்
உள்குவா ருள்ளத்தி னுள்ளார் போலும்
ஆழித்தேர் வித்தகருந் தாமே போலும்
அடைந்தவர்கட் கன்பராய் நின்றார் போலும்
ஏழு பிறவிக்குந் தாமே போலும்
இன்னம்பர்த் தான்தோன்றி யீசனாரே

—திருவின்னம்பர் - திருத்தாண்டகம் - 2.

பூர்வகர்மத்தால் வருந்துகின்ற நெஞ்சத்தில் இவ்விறைவன் திருவுருவம் பதிந்தவுடன் பஞ்சப்பொதியில் நெருப்புப் பொறி புகுந்ததுபோல், அவ்வினை நீறுகுமன்றோ? அதனுல் மனக்குறை யென்பது முற்றும் நீங்க ஆநந்தநிறைவு உண்டாகுமென்பதைக் காட்ட, தன் நெஞ்சை நோக்கி அப்பர் கூறுவது காண்க:—

மிறைபடுமிவ் வுடல்வாழ்வை மெய்யென் றெண்ணி
வினையிலே கிடந்தழுந்தி வியவேல் நெஞ்சே
குறைவுடையார் மனத்துளான் குமரன் தாதை
கூத்தாடுங் குணமுடையான் கொலைவேற் கையான்
அறைகழலுந் திருவடிமேற் சிலம்பு மார்ப்ப
அவனிதலம் பெயரவரு நட்டம் நின்ற
நிறைவுடையா னிடமாம் நெய்த்தான மென்று
நினையுமா நினைந்தக்கா லுய்ய லாமே.

—திருநெய்த்தானம் - திருத்தாண்டகம்.

"கொலைவேல்" என்பது பரம்பொருளின் திவ்ய சக்தி இது சமர சூரபன்மனைத் தடிந்ததாதலின், மாயையின் முதற் பிள்ளையைப் பொன்றவித்த கூர்மையுடையதாதலின், இப்படை மன்த்தகத்தே மாயையின் சம்பந்தமான உள்ளப் பகைகளை வேரறச்செய்வதாகும்.

இம்மூர்த்தியை வழிபடுதல் சாதாரணமாய்ச் சுலபமான காரியம்அன்று. சிவபெருமானை எவ்வழியிலும் வழிபடலாம். முருகக் கடவுள் சிவபெருமானுடைய மூர்த்தமே யாயினும், அம்மூர்த்தியை யடையச் சிலமும் நோன்பும் சிறந்து விளங்கவேண்டும். இச்சக்தி, உமாதேவியாராலும் தனது ஆட்சியில் வைக்காதுவிடப்பட்டதாகும். ஆகையால் இதைச்சகுணோபாசனையாலாவது, நிற்குணோபாசனையாலாவது வயப்படுத்தற்கு இருதய பரிசுத்தம், மனச்சுத்தம் தேக சுத்தம் முதலியன மிகவும் அவசியம். ஆகையால் சிவபெருமான் வழிபாடும்இவ்வாறுசெய்வது சிறப்பாயினும், உலகத்திலுள்ள எல்லா மனிதர்களுக்கும் எளிதில் கிட்டாத தன்மையாதலால், கங்கைவார் சடைக்கரந்த உமையாள் பங்கனை நமது சமயகுரவர்கள் உலகுஉய்யுமாறு பாடிச் சரியை கிரியை மார்க்கங்களை வெளிப்படையாகக் காட்டினர். முருகக் கடவுளின் தன்மை ஈதென்று பின்வரும் நம்பியாரூரர் திருப்பாசுரம் விளக்கும்:—

திங்க டங்கு சடையின் மேலோர்
திரைகள் வந்து புரள வீசும்
கங்கை யாளேல் வாய்தி றவாள்
கணப தியேல் வயிறு தாரி
அங்கை வேலோன் குமரன் பிள்ளை
தேவி யார்கோற் றட்டி யாளார்
உங்க ளுக்காட் செய்ய மாட்டோம்
மோண காந்தன் றளியு ளீரே

—சுந்தரர்-திருவோணகாந்தன்றளி - பண் இந்தளம் 2.

திருக்கையில் வேலாயுதத்தைவைத்துள்ள தன்குமரனை வெப்பம் குறையுமாறு உமாதேவியாரும் யாதும் செய்யவில்லையே, அம்மூர்த்தியை நெருங்குவது எங்ஙனமெனத்தன் உள்ளக்குறையை இவ்வாறுநம்பியாரூரர் வெளியிடுகின்றார்போலும். மண்ணும், விண்ணும் அண்டசராசரங்கள் யாவும் சிவபெருமான் ஆட்சியிலிருந்தும், யான் சிவனுக்குத்தோழனுயிருந்தும், இக்குமரனது மூர்த்தம் யாதெனச் செவ்வனே உணர்ந்திலேனே, இதுவும் உன் திருவருளோ வென்று அவர் இரங்குவது காண்க:—

மண்ணுலகும் விண்ணுலகு மும்மதே யாட்சி
மலையரையன் பொற்பாவை சிறுவனையுந் தேறேன்
எண்ணிலியுண் பெருவயிறன் கணபதியொன் றறியா
னெம்பெருமா னிதுதகவோ விபம்பியருள் செய்வீர்
திண்ணென வென் னுடல்விருத்தி தாரீரே யாகிற்
றிருமேனி வருந்தவே வளைக்கின்றே னுளைக் [டா
கண்ணறையன் கொடும்பாட னென்றுரைக்க வேண்
கடனுகக் காரோண மேவியிருந் தீரே.

சுந்தரர் - திருநாகைக் காரோணம் - பண் கொல்லிக் கௌவாணம்.

கந்தனை மனதில் அமைத்து வழிபடுவதுயோகத்திற் சிறந்தசமாதிநிலை ஆகும்என்னும் கருத்தைவெளிப்படுத்த, நம்பியாரூரர் "மலையரையன் பொற்பாவை சிறுவனையுந்தேறேன்" என்று கூறினர். இது சொரூபசமாதியின் அரிய நிலை. உள்ளிருக்கும் கரணங்களை ஒன்றொன்றாய்க் களைந்து, இது "நான் அல்ல" "இதுவும் நான் அல்ல" என்று என்று எல்லாவற்றையும் நீக்கி முடிவில் நின்ற "பற்றற்றார் சேர்பழம்பதி" யாகிய பெரும்பொருளை அறிகுக்கும சித்தத்தால் உணர்வதாம் இது. அருவமாயும், அறிவாயும், சத்தாயும், ஆநந்தமயமாயும் இருக்கின்றவொரு அரிய நிலையான சேந்தன், இம்மையிலும் எட்டுதற்கரிய மலைபுலக அரசன் எனப்படல் ஒருவகை உருவகமேயாம். அவ்வேளின் இருபுறத்திலும் விளங்கும், தெய்வயானை வள்ளியம்மை

என்றுமிருவரும் இப்பரப்பிரம்ம சொருபத்தின் இரண்டு சக்திகள் ஆம்என மேலோர்கூறுகின்றார். ஒன்று மறுமைப்பயனை தெய்வீக தத்துவத்தில் அடையச் செய்வது.மற்றொரு சக்தி இம்மையில்அவ்வாறு மனிதர்அடைவதற்குத்தடையாகும்பகைகளை வேரறச்செய்வதற்குத் திண்மையாய் நிற்பது.இம்மையிலுள்ள பகைகள் அற்றபின், மறுமைப் பயன் எளிதாதலால், அதைக் கருத்தில்அமைத்த நமது சமயகுரவர்கள் குமரவேளை, வள்ளிமணாளனென்றே பெரும்பாலும் பாடினரன்றி, தெய்வயானை மணாளனென எத்தேவாரத்திலும் பாடியிருக்கக் காணவில்லை. "அமரர் சேனைக்கு நாயகன்"என்று பாடியவிடத்திலும் "குறவர் மங்கை தன் கேள்வன்" என்று பாடப்பட்டதேயன்றி இந்திரன் புதல்வியின் கேள்வனெனப்படவில்லை.* "குறவனார்தம்மகள் மணவாட்டி" என்று வன்றொண்டரும் பாடினார். சம்பந்தரும்அவ்வாறே "வள்ளி முலைதோய் குமரன்" என்றார்.

குறமின்தோள்மணந்த கடம்பமர்காளையைவணங்கும் அடியார்களின் துன்பம் கடல்போ லிருப்பினும் அது ஒரு நொடியில் வற்றுமென்னும் கருத்தைக் காட்ட, அப்பரும் "நஞ் செந்தின் மேய வள்ளி மணாளற்குத் தாதை" என்றார்:—

> களவி முதுகாட்டி லாடி கண்டாய்
> காலனையுங் காலாற் கடந்தான் கண்டாய்
> புள்ளி யுழைமானின் தோலான் கண்டாய்
> புலியுரிசே ராடை புனிதன் கண்டாய்
> வெள்ளிமிளிர் பிறைமுடிமேற் சூடி கண்டாய்
> வெண்ணீற்றான் கண்டாய்நஞ் செந்தின் மேய
> வள்ளி மணாளற்குத் தாதை கண்டாய்
> மறைக்காட் டுறையும் மணாளன் றானே
>
> —திருமறைக்காடு - திருத்தாண்டகம் 4.

இப் பாசுரச் சொற்றொடர்களின் ஆழத்தைக் கவனிக்கவும். அவை யொன்றுக்கொன்று சம்பந்தமற்ற சொற்றொடர்கள்போல் காணப்படினும், மிகவும் ஒற்றுமையான முடிவைக் காட்டுவதுணர்க. இவ்வாறு கந்தன் உருவதத்துவமும் அருவதத்துவமும் சிவசொரூபமாய்த் திகழும்.

* சித்தாந்தம் ஸ்ரீமுகவாண்டு மாசித்திங்கள் (1934—பிப்ரவரி) வெளியிடாகிய மலர் 7-இதழ் 2-ல். "தேவார சிவகுமாரர்கள்" என்னும் தலைப்பமைந்த, திருவாளர். தி.கு.கி. நாராயணசாமி நாயுடு அவர்களின் கட்டுரையை நோக்குக.

# தமிழ்ப்பாடம் 107.

## வில்லிபாரதம்—உத்தியோகபருவம்.

[85-வது பக்கத் தொடர்ச்சி]

### கிருஷ்ணன் தூதுச் சருக்கம்.

> போர்முடித்தா னமர்பொருது புலம்புறுசொற்
> பாஞ்சாலி பூந்தண் கூந்தல்
> கார்முடித்தா னிளையோர்முன் கழறியவஞ்
> சினமுடித்தான் கடவுட் கங்கை
> நீர்முடித்தா னிரவொழித்த நீயறிய
> வசையின்றி நிலைநின் றோங்கும்
> பேர்முடித்தா னிப்படியே யார்முடித்தா
> ரிவனுடனே பிறப்ப தேநான். 13

இதற்குமுன் ஒரு செய்யுள் விடப்பட்டது. தருமனால் தமக்குநேர்ந்த நஷ்டங்களைக் கூறிப் பீமசேனன் இதனில் பழிக்கின்றான்.

பதவுரை.

அமர் பொருது - சண்டையைச் செய்து, போர் முடித்தான் - பகையைத் தீர்த்துவைத்தான், புலம்பு உறு சொல் - மிகப் புலம்புகின்ற சொற்களையுடைய, பாஞ்சாலி - திரௌபதியின், பூ - அழகிய, தண் - குளிர்ச்சி பொருந்திய, கூந்தல் - கூந்தலாகிய, கார் - மேகத்தை, முடித்தான் - கட்டிவைத்தான். இளையோர் - தம்பியர்களாகிய நாங்கள், முன் - துகிலுரிந்த காலத்தில், கழறிய - சொன்ன, வஞ்சினம் - சபதங்களை, முடித்தான்-நிறைவேற்றிவைத்தான். வசை இன்றி - குற்றம் இல்லாமல், நிலை நின்று ஓங்கும் - நிலைநின்று வளர்கின்ற, பேர் முடித்தான் - எங்கள் புகழைச் செய்தமைத்தான்.

கங்கைநீர் - கங்கை ஆற்றை, முடித்தான் - முடியில் தரித்தவனாகிய, கடவுள் - சிவபிரானது, இரவு - பிச்சை யெடுத்தலை, ஒழித்த - தீர்த்த, நீ - (கிருஷ்ணனாகிய) நீ, அறிய - சாக்ஷியாக, இப்படியே - இவ்விதமாக, யார் முடித்தார் - எல்லாவற்றையும் முடித்தவர் இந்தத் தருமன்போல் வேறு யார் இருக்கின்றார்.

இவனுடன் பிறப்பதே நான் - இவனோடு நான் பிறக்கவேண்டிநேர்ந்த என் விதியை யாரிடம்போய்ச் சொல்லிக்கொள்வது.

விளக்கம்:—முடித்தான் என்றவொருசொல் இச் செய்யுளில் பலமுறை பயின்று, சிறிது சிறிது வேறுபட்டபொருளைக் குறித்து நிற்கின்றது. போர் முடித்தான், கார்முடித்தான், வஞ்சினமுடித்தான், பேர் முடித்தான், என்னும் நான்கு இடங்களிலும் 'முடித்தான்' என்பது வினைமுற்று. நீர் முடித்தான், யார் முடித்தார். என்னும் இடங்களில் அது வினையாலணையும் பெயர்.

கடவுட் கங்கைநீர் முடித்தான் இரவொழித்த நீ அறிய, என்பது பீமசேனன் கிருஷ்ணனைப்பார்த்துச் சொல்லியது. கங்கையைச் சடையில்தரித்த சிவபிரான் பிச்சை எடுக்கவேண்டி நேர்ந்ததை நீக்கிய கிருஷ்ணா நீ, இந்தத் தருமன் எங்கள் மானம் குலைந்துபோகும்படி செய்துவருவதெல்லாம் அறியாயோ, என்பது கருத்து. பிரம்மனுக்கு முன்னே ஐந்துதலைகள் இருந்தன வென்றும், அதுகண்ட உமையாள், "நினக்கும் கிரமைந்து, இப்பிரம்மனுக்கும் ஐந்து சிரங்கள் என்றால், உனக்கென்ன உயர்வு இருக்கின்றது" எனச் சிவபிரானைப் பரிகசித்தாள் என்றும், இதற்கு ஆற்றாது சிவபிரான் உடனே பிரம்மனது நடுத்தலையைக் கிள்ளிவிட்டாரென்றும், இது பிரம்மஹத்தி தோஷமாகையால்,கிள்ளிய அந்தத்தலை சிவன் கையைவிட்டு நீங்காமல் மண்டையோடாய் உலர்ந்தும் ஒட்டிக்கொண்டே இருந்ததென்றும், இது அகல்வதற்கு என்ன செய்வதென்று பரமசிவன் பிரம்மனை வேண்டிக்கொள்ள அப்பிரமன், "இம் மண்டையோடு நிறையும்படி நீ பிச்சையெடுத்தால் அது விலகும்" என்று விதித்தாரென்றும், இதன்படியே பரமசிவன் கபாலியாக எங்



கெங்குஞ் சென்று எவ்வளவு பிச்சையெடுத்தும் அது நிறையாமலே இருந்தது என்றும், அதுகண்டு இரங்கித் திருமால் தன் கையால் பிச்சையிட அக் கபாலம் நிறைந்து, பரமசிவனது இரவும் துயரமும் நீங்கின வென்றும் கூறப்படுகின்ற வரலாறு இவ்வடியினில் அடங்கி யிருக்கின்றது.

விரிவுரை:—"பரமசிவனது துன்பத்தைத் தீர்த்த கிருஷ்ணா, நீ யறிய நாங்கள் இப்பாடு படுகின்றோம்," என்று பீமசேனன்கூறுவதில், "சிவபிரானுடைய இடுக்கண் களைந்த நீ, எங்கள் துயரத்தைப் போக்குவது அருமையோ" என்னுங் கருத்து அடங்கியிருக்கின்றது. இவ்விதம் ஒரு கருத்தை வெளிப்படையாகச் சொல்லாமல் அடைமொழிகளுக்குள் அமைத்துக் குறிக்கின்றதும் ஓர் அணியாம். இதனைத் தமிழில் கருத்துடை யடையணி என்றும், வடமொயிழில் பரிகராலங்காரம் என்றும் அழைப்பர்.

ஒரே சொல் ஒரே பொருளிலேனும், அல்லது ஒரேசொல் பல பொருளிலேனும், அல்லது ஒரேபொருளுடைய வேறுவேறு சொற்களேனும் பலமுறை வந்து பயிலும்படி செய்யுளில் அமைப்பது பின்வருநிலையணி என்று அழைக்கப்படும். இந்தப் பாசுரத்தில் 'முடித்தான்' என்றசொல்ஆறுமுறை வந்து, பின் வருநிலை யணியை விளக்கின்றது. முன் நளவெண்பாவில், "மண்ணரசர் வன்மாலை தம்மனத்தே சூட வயவேந்தைப் பொன்மாலை சூட்டினாள் பொன்" என மாலை என்னுஞ் சொல் இருமுறை வந்திருப்பதும் இவ்வணியே. அங்கு மாலை என்ற ஒரேசொல் வேறுவேறு பொருள்தர இரண்டு இடங்களில் வந்திருக்கின்றது. முடித்தான், என்று இப்பாசுரத்தில் வந்திருப்பவைகளில் 'கங்கைநீர்முடித்தான்' என்றதொடரில் சடையில் தரித்தவன் என்று முற்றிலும் வேறான பொருளும், மற்ற இடங்களில் 'நீக்கினான், கட்டினான் நிறைவேற்றினான்' எனச் சிறிதுசிறிது மாறியபொருளும் பெறுகின்றோம். இது பின்வருநிலையணி.

பின்வருநிலையணி நான்குவிதமாக அமைதல்கூடும்:-

i. ஒருமுறைவந்தசொல் ஒரேபொருளில் பின்னும் பின்னும் வருதல். இதனைச் சொற்பொருட் பின்வருநிலை யணி யென்பர்.

> துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
> துப்பாய தூஉ மழை.

என்ற குறட்பா இதற்கு நல்ல உதாரணம். இங்குத் துப்பு என்னும் ஒரேசொல் உணவு என்னும் ஒரே பொருளில் பலமுறை வந்து இருக்கின்றது. சொல்லும் துப்பு என்னும் சொல்லே, பொருளும் உணவு என்னும் பொருளே. சொல்லும்பொருளும் மாறுபடாமல் வருவதால் சொல்பொருள் பின் வருநிலை யணி என்பது இதற்குப் பேராயிற்று. (வடமொழியில் இது உபயாவ்ருத்தி அலங்காரம் என்று கூறப்படும்)

> ஆர்த்தன பேரிக ளார்த்தன சங்கம்
> ஆர்த்தன நான்மறை யார்த்தனர் வானோர்
> ஆர்த்தன பல்கலை யார்த்தனர் பல்லாண்
> டார்த்தன வண்டின மார்த்தன வேலை

என்ற கம்பராமாயணச் செய்யுளும், 'இவ்வளவிற் செல்லுங்கொல், இவ்வளவிற் காணுங்கொல்" என்னும் நளவெண்பாச் செய்யுளும், இவ்வகையன:—

ii. ஒருமுறை வந்தசொல் (ஒரே பொருளில் அல்லாமல்) வேறுவேறு பொருள்களில் பின்வருவது.

"மானை எய்தவர் இன்னும் என் மடமானை எய்திலார்," என்று முன் திருவரங்கக் கலம்பகத்தில்(வால்யூம் 6, பக்கம் 872) மான் என்ற சொல்லும் எய்தல் என்ற சொல்லும் வேறு வேறு அர்த்தத்தில் வரும்படி அமைந்த அடியும், அதுவேபோல் அமைந்திருக்கின்ற அந்தப் பாசுரத்தின் மற்றஅடிகளும், இதற்கு நல்ல உதாரணமாகும்.முன்னே எடுத்துக்காட்டிய நளவெண்பாச் செய்யுளில் 'மாலை' என்பதுஇருமுறைவந்திருப்பதும் இவ்வகைத்தே.இப்படி, பொருள் வேறுபடச் சொற்கள்மாத்திரம் ஒன்றாயிருத்தலால், இதனைச் சொற் பின்வருநிலை யணி என அழைப்பர். (வடமொழியில் இது, சப்தாவ்ருத்தி யலங்காரம் என்று கூறப்படும்.)

தாடகையைக் கொன்று அகலிகையை அளித்த இராமனது செய்கையை, இவ்வீரன், "வாங்கியன கையாலும் ஒரு சாபம் (வில்), காலாலும் ஒரு சாபம் (சபித்தல்)" என்று துதிக்கும் வில்லிபுத்தூரார் செய்யுளடியில் சொற்பின்வருநிலையணி அமைந்திருக்கக் காணலாம்.

இப்பாசுரத்தில் 'முடித்தான்' என வருவதைச் சொற் பின்வருநிலை யணி யென்னல்வேண்டும்.

iii. பொருள்வேறுபடா திருக்கும்படி, அவ்வொரு பொருளையே தருகின்ற வேறு வேறு சொற்கள் செய்யுளில் வருதல்:—

> ஆறுபாய் அரவம் மள்ளர் ஆலைபாய் அமலை ஆலைச்
> சேறுபாய் ஓசை வேலைச் சங்குவாய் பொங்கும் ஓதை
> ஏறுபாய் தமரம் நீரில் எருமைபாய் துழனி இன்ன
> மாறுமா றாகித் தம்மின் மயங்குமாம் மருத வேலி.

என்னும் கம்பராமாயணச் செய்யுள் இவ்வகைக்கு நல்ல உதாரணமாகும். ஒலியென்ற ஒரே பொருளைக் குறிக்க இதில் பலசொற்கள் வந்திருக்கின்றன. சொற்கள் வேறுவேறாகப் பொருள்மாத்திரம் பொருந்த வந்திருப்பதால், இதனைப் பொருட்பின்வருநிலை யணி என அழைப்பர். (வடமொழியில் இது அர்த்தாவ்ருத்தி யலங்காரம் என்று கூறப்படும்)

iv. இனி, இவ்விதமாக ஒரே அர்த்தத்தையுடைய வேறு வேறு சொற்கள் வருமானாலும் அவை ஒரு வஸ்துவைக் குறிக்காமல் உவமைவாயிலாக வேறு வேறு வஸ்துக்களை அடுத்து நிற்கலாம். தலைவியைக் கண்டு மகிழ்கின்ற ஒரு தலைமகன்,

> செங்கமல நாட்டஞ் செழுந்தாமரை வதனம்
> பங்கயஞ் செவ்வாய் பதுமம்போற்--செங்கரங்கள்
> அம்போ ருகந்தா ளரவிந்தம் மாரனார்
> தம்போர் உகந்தாள் தனம்.

என்று புகழ்வதில், அவளது கண் முகம் வாய் கை பாதம் ஸ்தனம் ஆகியவைகள் அனைத்திற்கும் தாமரையையே உவமையாகக்கொண்டு அந்தத் தாமரையென்பதைச் கமலம் தாமரை பங்கயம் பதுமம் அம்போருகம் அரவிந்தம் என்ற வேறுவேறு சொற்களால்செப்புகின்றான். இதனை, உவமைப்பொருட் பின்வருநிலையணி என்னலாம். [மாரனார்தம் போர் உகந்தாள்—மன்மதனுடைய காமப் போரை விரும்பினவள்]

---

> பரிவுடன்மற் றிவைகூறும் பவனகுமா
> ரனைமலர்க்கை பணித்து நோக்கித்
> தருதுலத்தோர் போரேறே குற்று[illegible]
> பார்க்குக்காற் கற்ற[illegible]

199157

யொருகுலத்திற் பிறந்தார்க ளுடன்வாழும்
வாழ்வினைப்போ லுறுதி யுண்டோ
இருவருக்கும் வசையன்றோ விருநிலங்கா
ரணமாக வெதிர்ப்ப தென்றான் 14.

[பீமசேனனது வாசகமான ஒரு செய்யுள் இதற்குமுன் விடப்பட்டது. இதனில் பீமனைத் தருமன் சாந்தம்செய்ய முயல்கின்றான்.]

பதவுரை.

பரிவுடன் - வருத்தத்துடன், இவை - இவைகளை, கூறும் - சொல்லிவருகின்ற, பவன குமாரனை - வாயுவின் மகனாகிய பீமசேனனை, (தருமராசன்) மலர்க்கை - தாமரைமலர்போன்ற தன்கைகளால், பணித்து - (சும்மாவிரு என்று) அமர்த்தி, நோக்கி - அவனைப் பார்த்து,

குருகுலத்து - நம் குருகுலத்திலே, ஓர் - ஒப்பற்ற, போர் ஏறே - போர்வல்ல ஆண்சிங்கம்போன்றவனே,

குற்றம் அது - குற்றத்தையே தேடித்தேடி, பார்க்குங்கால் - பார்ப்போமாயின், சுற்றம் இல்லை - உறவினர் என்பவர் ஒருவரும் நமக்கு இருப்பதென்பதே இயலாமற்போய்விடும்;

ஒரு குலத்தில் - ஒரேகுலத்தில், பிறந்தார்கள் - பிறந்தவர்கள், உடன்வாழும் - சேர்ந்து வாழ்கின்ற, வாழ்வினைப்போல் - வாழ்வைப்போல, உறுதி உண்டோ - நன்மை தரத்தக்கது வேறு உண்டோ!

இரு - பெரிய, நிலம் - இந்த நாடு, காரணம் ஆக - காரணமாக, பொருதல் - போர் செய்வது, இருவருக்கும் - நம் இருதிறத்தவர்க்கும், வசை அன்றோ - பழிப்பிற் கிடமாகாதோ,

என்றான் - என்று தருமன் கூறினான்.

---

# கம்பராமாயணம்

## கிஷ்கிந்தாகாண்டம்—2. அநுமப் படலம்

[79-வது பக்கத் தொடர்ச்சி]

எண்ணிய வாங்கே யெய்துமாங் காட்சி.

வானரமே யறியும் வானரத்தின் தன்மை என்பதை உன்னியோ வான்மீகமுனிவர், "ஆ ஆ! உன் வானரத் தன்மை நன்கு வெளியாயிற்றே" என்று அநுமன் சுக்கிரீவனைப் பார்த்துச் சொல்லும்படி வைத்தார். இதனையும், அரசர்தம் இலக்கணத்தைப் பற்றி அநுமன் சுக்கிரீவனுக்கு அறிவுறுத்திய உரைகளையும் விட்டு மற்றபடி, பெரும்பாலும் வடமொழி நூலைத் தழுவியே கம்பர் இப்படலத்தைத் நுவக்குகின்றனர்.

பம்பைக் கரையினின்று புறப்பட்டு வழிநடந்தேகினர் இராம லக்ஷ்மணர்கள்,

எய்தினர் சவரிநெடி தேயமால் வரையெளிதி
னெய்தினே நினைதனி னேன்மைசால் கவியரசு
செய்வதோர் கிலனிவர்க டெவ்வரா மெனவெருவி
உய்துநா மெனவிரைவி னோடினன் மலைமுழையின்

[அவ்வாறுசென்றவர், சவரி நெடுங்காலம் வசித்திருந்த ருசியமுக பர்வதத்தின்மீது விரைவில் எளிதாக ஏறினர். அப்பொழுது அம்மலையில்இருந்த குரங்குகளுக்குத் தலைவனை பெருமைவாய்ந்த சுக்கிரீவன், இவர் பகைவர்ஆவார் என்று எண்ணிப் பயந்து, இன்ன செய்வதென்று அறியாமல், தப்பிப்பிழைப்போம் என்றுகருதி மலையிலிருந்த குகையொன்றினுள் விரைந்து ஓடினன்]

பகை கொண்டவன் பயமுங் கொள்வது இயற்கையே. வருவோரெல்லாமவனை வெருவரச்செய்வர். ஓடிச் சென்று இவன் ஒளிந்துகொண்ட அம்முழையின்கண் அநுமன் இருந்தனன் போலும். அவனை வெளியே அழைத்து வந்து,

காவின்மா மதலையிவர் காண்பினோ கறுவுடைய
வாலியே வலின்வரவி னர்கடாம் வரிசிலையர்
நீலமால் வரையனையர் நீதியா நினைதியென
மூலமோர் கிலன்மறுகி யோடினன் முழையதனின்

[வாயுவின் சிறந்த புத்திரனே, கட்டமைந்த வில்லையுடையவராய், பெரிய நீலமலைபோன்றவராய் வரும் இவர், வன்மம் உடைய வாலியின் ஏவலினால் வருகின்றவராவார், காண், நேராக நினைத்துப்பார், என்று கூறி, அவர் வரும் காரணமறியாமல் மனங்கலங்கிக் குகைக்குள்ளே மீண்டும் ஓடினன்]

இதற்கிடையே ஏனைய வானரத்தலைவர்களும் அவ்வயின் வந்து சேர்தலும்,

தாரனீ லனைமருவு தாமமா ருதியைமுதல்
வீரரோ டரவிசுதன் மேருமால் வரையைநிகர்
பாரமா மலையினொரு பாகமோ டுதல்புரிய
ஆரமார் பருமதனி னருமா றுறல்கருதி

[தாரனையும் நீலனையும் ஒளிசூழ்ந்த தோற்றமுடைய அநுமனையும் முதலாகவுள்ள வானரவீரர்களுடனே சூரியனது புத்திரனாகிய சுக்கிரீவன், மேருமலையை ஒத்த பெரிய அம்மலையின் ஒருபக்கத்தில் ஓடி ஒளிக்க, மாலையணிந்த மார்புடைய இராமலக்ஷ்மணர்கள் அம்மலையில் ஏறக் கருதி]

மானைநா டுதல்புரிஞர் வாலியே வலின்வருத
லானவா றலர்மறுகி யாவிசோர் நிலையரென
ஏனைவா னரர்சிலரு மேகிமா முழையின்முழு
ஞானநா தரையறிவி னடிமா ருதிமொழியும்

[சீதையைத் தேடுகின்றவர் ஆயினர். அப்பொழுது சில வானரவீரர்கள் பெரிய அக்குகையினுள் சென்று, "இவர் வாலியின் ஏவலால் வருகின்றவர் அல்லர், மற்று, மனங் கலங்கி உயிர்சோர்கின்ற நிலையில் இருக்கின்றனர், என்று சொல்ல, அம்பொழுது அநுமன், ஞானத்திற்குத் தலைவர்களாகிய அவ் விராமலக்ஷ்மணர்களைத் தன் அறிவினால் ஆராய்ந்து சொல்லலானான்]

உண்மையே நோக்கின் மாருதி யாதுந் துணிந்து கூறினானலன். வாலியால் அனுப்பப்பெற்றவர்களோ இவர் என்று ஐயுற்று அஞ்சிய சுக்ரீவனுக்கு, இவர் வாலி அல்லர் என்று இம்மாருதி பொருத்தமின்றி எடுத்துக்காட்டி, அச்சுக்கிரீவனது குரங்குமதியையும் பரிகசித்ததது வான்மீகத்தில் நிகழ்ந்தசெய்தி. இங்கு இவன்,

அவ்விடத் தவர்மறுகி யஞ்சிநெஞ் சழியமைதி
வெவ்விடத் தினைமறுகு தேவர்தா னவர்வெருவ
றவ்விடத் தனிபருகு தாழ்சடைக் கடவுளென
இவ்விடத் தினிதிருமி னஞ்சலென் றிடையுதவி

---



[துன்பத்தைப் போக்கி, மாயமாகிய பழைய வினைகளை நீக்கி, யமலோகத்திற்கு அல்லாமல், மீளாத மோக்ஷ வழியிலே செலுத்துகின்ற தேவரோ இவர். இவர்களைக் கண்டவளவில் எனக்கு எலும்பு உருகுகின்றது. அளவற்ற பக்தி மிகுகின்றது. இவர்பால் உண்டாகின்ற அன்பிற்கு எல்லை இல்லை. இப்படி ஆவதற்கு, இவர்களுக்கும் எனக்கும் இருக்கின்ற தொடர்பு யாதோ, அறியமாட்டாமல் இருக்கின்றேனே.]

என மயங்கினன்போல் அநுமன் மதியுறநனி மகிழ்கின்றான். பிறந்த பிறப்பிற்கும் பெற்ற கல்விக்கும், கண்முன் கண்ட காட்சிக்கும் ஒக்கநிகழ்ந்த உயர்வுறமிர்கின்ற சிந்தனையின்செம்மையை வாயுவின் மதலையால் இங்ஙனம் ஆய்ந்தறிந்து கொள்ளலாம்.

---

# சூளாமணி

[76-வது பக்கத் தொடர்ச்சி]

## 2. நகரச் சருக்கம்

நாட்டுச் சருக்கத்திலே விரித்துக் கூறப்பட்ட இயற்கையினையும் ஆக்கத்தினையும் உடைய (ஸுரம்ய தேசம்) சுரமைநாட்டினுள்ளிடத்தே, போதனம் எனச் சிறப்பித்துச் சொல்லப்படும் நல்லதோர் நகரம் உண்டு. மன்னவன், பிறர்க்கு இல்லாத சிறப்போடும் விளங்கி நிலைக்கும்படியாக அந்நகரத்தினை மனைநூல்வல்லோர் வகுத்தமைத்துள்ளார்கள். பொன்னாகவே விளங்கும் மதில்களையே வேலியாகக்கொண்டு மிளிர்கிறது இந்நகரம். நாகலோகத்தையும் கண்டு 'இதுவும் ஓர் நகரமோ' என எள்ளிநகையாடுவதேபோல், எல்லோர்க்கும் எல்லா வகையாலும் இனியதாய் விளங்குகின்றது ஈது.

பொன்னரனும் நாட்டிலே பொன்னம்மையே உருவெடுத்தாற்போல விளங்குவது இந்நகரம். இமயமலைச் சாரலில் உள்ள பொய்கையொன்றிற் பூத்திருக்கும் தாமரையிலே திருமகள் விளங்குகின்றாள் என்பது பழைய வரலாறு. அப்பொய்கையும் தாமரையும் பெரியனவாய்த் திகழவேண்டி, சங்கங்கள் மேயும் அலைகள் வீசுகின்ற பெருங்கடலாயும் இடம்மிக அகன்ற உலகமாயும் அகன்று வளர்ந்தபோது, அப்பூவின் நடுவிடமாக, பேரழகினோடு திருமேனிப்பொலிவும் விளங்கச் செங்கண்கொண்டு மலரநோக்கி உலகை யாளும் திருமாலாம் திவிட்டன் அரசுபுரிகின்ற சுரமை நாடே விரிந்தோங்கியது. இன்பத் தேன் பெருக்கெடுக்கின்ற அம் மலர்நடுவே, அத்திருமாலின் தோளில் ஏறி நிற்க வந்து திருமகளே நகர்வடிவாகிப் பொலிகின்றாள். அத்தகைய நலத்ததாகும் இந்நகரம்.

தொலைவிலே; ஈதோ இந்நகரம் தோன்றுகின்றது! அழகொடு ஒளியும் வீசிநிற்கின்றன அதன் மதில்கள். அகழியை ஓர் இடையணியாக அணிந்து அந்தச் செல்வச்செருக்கினால் உடல் வீங்கியதுபோல அகன்றும் உயர்ந்தும் பெருத்தும் உள்ளன அவை. ஞாயிறானவன், இரவில் ஒடுங்கிநின்ற தன்னுடைய வெப்பமான கதிர்களை விரித்துத் தோன்றுவதற்கு நிலைக்களமான கடலின்மீது அவன் அக்கடலின்று மூழ்கி எழுந்து தங்குவதற்கென உயரியமேடை ஒன்று அமைத்ததே போன்றுளது, கடலையனைய அகழியினிடையே மேடாக வுயர்ந்துதோன்றும் அம்மதில. அம்மதியின் மேலே யுள்ள மாடங்கள் பலபுறமும் நோக்கும் வாயில்களோடு விளங்குகின்றன. அந்நகரின்கண் உள்ள மாடங்களோ நிலத்தே உழுது பயன்கொண்டது சாலாதென வானையும் உழுவான் முற்பட்டாற்போல வானுலகில் முட்டிநிற்கின்றன. அம்மாளிகைகளின் நுனியிடமோ முகில்களையும் பிளந்துகொண்டு மிகமிக உயரச்சென்று தம் செல்வச்செருக்கால் எக்களுத்தம் பெற்று விளங்குகின்றன. செல்வத்தாற் செருக்கிய போதும், தம்மையும் அழிய மாறிப் பிறர்க்கு உதவும் பெருநிலையிற் பிறழாதனவாய், எந்நாளும் வெள்ளிடையே உழன்று திரியும் செங்கதிர்க் கடவுளின் கட்டழியாத தேரின் குதிரைகளுக்குத் தமது தாங்கிய தலையையே மிதியடியாகத் தந்து சிறப்புறுகின்றன. அந்தக் குதிரைகளும் தம் களைப்புத் தெளியும் வரை நம்மிடமளவும் வந்து நீண்ட அம்மாடங்களின் தலையிலே தம் கால்களை வைத்து நிற்கின்றன.

தொலைவிற் காட்சி யீதானால், இந்நகரைச் சூழ்ந்து விளங்கும் மதிற்புறத்தே யிருந்து எழும் இன்னொலியும் இன்பத்தினுாபர்வையே காட்டிநிற்கின்றது. உயிர்நிலைகளில் மிகப் பெரியதான யானைமுதல் எறும்பு போன்ற வண்டுகள் வரையுள்ள உயிர்களனைத்தும் உணவை எளிதே பெற்று இன்புறுகின்றன. இந்நகரத்தே ஈதோ ஓர் பேரொலி முழங்குகின்றது. இருப்புத் தொடரினாலே மாமரத்தின் அடியிலே யானையைப் பூங்காவனத்திற் கட்டியுள்ளார்கள். அவ்வளவு பழகிய தாக்கும் அப்பானைக் கரும்பையே அதற்குக் கவளமாக இடுகின்றனர். செல்வத்திற் செருக்கிய ஆனை அதனையும் வெறுத்து நிற்கின்றது. அதனை வளர்ப்போர், அதன் நன்மையே கருதி வற்புறுத்தி ஊட்டுகின்றனர். ஈதே பேராரவாரமாக எழுகின்றது. இலேசான நீரொலியாக முழங்குகின்ற காவிலே, அரும்புகளுக்கிடையே மலர்ந்த போதுகளின் உள்ளிடத்தைத் தேனுடன் கோதி யுண்டு வண்டுகள் அவ்வின்பத்தைப் பாட்டாகப் பாடியொலிக்கின்றன. இவ்வொலியும் இம்முழக்குமான இசைபெற்று எங்கும் ஓர் இன்னொலியாகச் செறிந்து தோன்றுகின்றது அம் மதிற்புறம்.

மைதீட்டிய அழகொடு அதற்கு மாறாகக் கருவரி செவ்வரிபடர்ந்து மிளிர்கின்ற கண்கள்கொண்டு [illegible] நோக்கும் பெண்கள் அழகிய தம் மாடத்தின்மேலே தமது அருமருந்தனைய [illegible] கூடி நின்றபோது, யானையின் முழக்கத்தைக் கேட்டபோதெல்லாம் வலைப்பட்ட மான்போல மருண்டு மருண்டு விழித்துத் தமது தலைவர்களைப் பன்முறையும் உயிருறத் தழுவிக்கொள்வர். தேனிறைந்து [illegible] விளங்கும் மாலைகள் சூடிய அச்செல்வர்கள் தோள்களைக் கொடிபோன்ற பெண்கள் தழுவிநிற்பது கற்பகமரத்தை அழகுறத் தழுவியணைந்து நறுமணங் கமழ வளர்கின்ற காமக்கொடியை நினைப்பூட்டுகின்றது. இவர்கள் இருக்கும் இடமோ அம்மணிகளிழைத்த மாடத்தின் மேனிலையதாம். அத்தோ வானையளாவி நிற்கிறது. அம்மாடமோ, வானகத்தை முட்டும் மேனிலைத்தே கற்பக மரமும் காமவல்லியும் கலந்து நிற்க மேலோங்கி அகன்று விளங்கும் மணிமலையே போன்று மிளிர்கிறது.—யானையும் கரும்புமேயன்றி மக்களும் மகிழ்ந்திருக்கின்றபடி யிது.

மணிமலை என நின்ற மாடங்கள் மேலும் மேலும் மலைபையே நினைப்பூட்டுகின்றன. அம்மாடங்களின் மீது மாதரார் தங்கள் கூந்தலுக்கு ஊட்டும் புகைமேலே வானகத்தேபரந்து தவழ்கின்றது. முகிற்கூட்டங்கள் மலைமேலே பரவிஆடுவதுபோன்று உள்ளது அப்புகை: அம்மாடங்களிற் களிப்புடன் ஆடும் பெண்கள் முழவு கொட்டுவது அம் முகிற்கூட்டங்களின் முழக்கமே போன்றுளது. புகையினிடையே தம்கூந்தலைஆற்றுதற் கமைந்த மாதரார், அக்கூந்தல் மெல்லிய காற்றினுல் அசைந்து தானே ஆற்றிக்கொள்வதால், கையை உளாதுவாளா இருந்து, ஓவியத்தேஎழுதிய கொடியேபோன்று நிற்கின்றனர். புகைச் செறிவு சிறிது நெகிழ்ந்தபோதெல்லாம் விட்டுவிட்டு ஒளிர்ந்து தோன்றும் அப்பெண்ணரசிகள், மலைமீது தவழ்ந்து முழவென முழங்குகின்ற முகிற்கூட்டத்தே எழுந்துதோன்றும் மின்னற் கொடியேபோன்று விளங்குகின்றனர். இவ்வகைத்தோற்றத்தால் மலையோடுமாறுபட்டு நிற்கின்றன அம்மாடங்கள்.

பொன்னாறும் நாட்டிஉள்ள அப்பெரியமாடங்கள் மற்றைய நகரங்களில்போல மண்ணுல் ஆயின அல்ல. மேற்கூடமோ, கண்ணைக் கவரும் பொன்னாலானவை. அவற்றின் வேலியாய் நின்ற சுவர்களோ, வெண்ணில வெறியும் வெள்ளியா லானவை. தரையோ குளிர்ந்த நிலாவைப் பரப்பும் சந்திரகாந்தக் கற்களால் ஆயது. சுவர் வெண்ணிலா எறிப்ப, இக்கற்கள் நீரூறி நிற்றலின் என்றும் குளிர்ந்து விளங்குகின்றது அத்தரை. வெறுஞ்சுவர்களாக இல்லாமல் இடையிடையே எழுதகங்கள் திகழ்வதால் அம்மாடங்கள் அழகுபெற்று விளங்குகின்றன.

அம்மாடத்தினுள்ளே இன்பவெள்ளம் ஆடலும் பாடலுமாகப் பொங்கி வழிகின்றது. தாம் மிகமிக விரும்புவதன் பயனுக மணிகள் அழுத்திய முழவின் இன்னெலி—அம்முழவிற்கேற்ப ஆடும் பெண்களின் சிலம்பு அதிரும் ஓசை—அவற்றிற்கேற்பப் பாடுவார் தம் இன்பப்பாடல்—இவையே எப்போதும் அங்கிருந்துவந்து நம்காதிற் புகுகின்றன. நகரமே வடிவான திருமகள், தன் திருவிற்கேற்பப் பல கலன்களையும் தன் உடல்பொதிய அணிந்து வீறுபெற்று, தன் னியக்கத்தோடு அவை அசைதலினுல் கலகல என எப்போதும் ஒலித்து நிற்பதேபோன்று இனியதாக உளது, அம்மாடத்தே எழும் இந்த இன்னெலியும்.

நகரத் திருமாது அணிந்த அணிகலன்களின் ஓசை இவைபோமேல் அவ்வம்மையாரின் குரலொலி யாதோ? அம்மாடத்தே நின்று ஒளிரும் பெண்கள்—தமது தலைவரே அன்றி மற்றையோர் தமிழ் முறையின்படி. தொடவுமாகாததாய்த் தாழியேபோல மணநிலையைக் குறிக்கும் கூந்தலுடையார், கண்டோர் கண்ணை அருள்வழியே கருநிறத்தால் குளிரச் செய்யும் கூந்தலுடையார், தமது காதலர் தொட்டாலும் உயிரோடு உடலும் குளிர உவப்பூட்டும் கூந்தலுடையார் இப்பெண்களது, மானென மருளினும் உயிர் ஒளிமிக்குங் காதளவும் ஓடிய கண்களைக்கண்டு, தன்னொன்ற கருநீர் நிலையிற் பூத்த குவளை என்ன மருண்டு ஓடிவருகின்றன வண்டுகள். காதளவோடி. மின்னுதலின் கண்கள் குவளையல்ல என எண்ணிக் கீழே குளத்திற் பூத்த குவளையருகே செல்வான் பறந்தோடுகின்றன. அவற்றினருகே செல்வதற்கு முன்னரே, மகளிரிடை யடைந்த ஏமாற்றம் மனத்தேயிருப்பதால் அப்பூக்களையும் நீராடும் மகளிர் கண்கள் எனக்கொண்டு அவற்றினருகே போவ தொழிகின்றன. இவ்வண்டுகளின் இடையாட்டத்தைக் கூர்ந்து நோக்கும் பெண்களின் கண்கள் இமைகொட்டாமல் நிற்றலின் அவையே குவளை என மீண்டும்மேனேக்கிப் பறந்து வருகின்றன. இவ்வாறே வந்தும் சென்றும் அலைகின்றன இவ்வண்டுகள். இவை ஒன்றைவிட்டு ஒன்றைநோக்கிப் புத்தம் புதிய புதையல் கண்ட ஓர் எளியானைப்போல எழும்போது, இயற்கைப்பண்ணேடும் ஆரவாரித்து ஆர்ப்பரிப்பது ஆழியிலே நீண்டெழுந்தமின்னற்கொடிபோன்றதிருவம் மையார் நகர வடிவாய்த் தன் னியற்கைக் குரல்கொண்டு ஆரவாரிப்பதே போன்றுளது. பொன் நரல்வது இங்ஙனம் எனக்காட்டிய பின் தோலாமொழித்தேவர் அச்சுரும்புகளைப் பின்தொடர்ந்து சென்று, அவை இவ்விடையாட்டத்தில் ஒரு சிறிதும் தேன் பெறுமல் மிகவும் இரங்கத்தக்கனவாய் இளைத்து நிற்பதைக் காட்டுகின்ருர்.

சிந்தாமணியிலே, மதிலைப் புனைந்துரைத்தபின்னர்ப் பரத்தையர்கள் வாழும் தெருக்களைக் கூறிக் கடைகளைப் புகழத்தொடங்குகிருர் திருத்தக்க தேவர். அஃதேபோலச் சூளாமணியினும் மதிலைப் புனைந்துரைத்த பின்னும் கடைகளைப் புகழ்வதற்கு முன்னும் வரும் மேற்கூறிய பாக்கள் பரத்தையரையே குறிக்கின்றன என்ன மன்ருடுவார் ஒரு சிலர். ஆடலும் பாடலும் முழவும் கூறியிருத்தலும் அதனை வற்புறுத்தும் என்பர். ஆடலையும் பாடலையும் பரத்தையரிடத்தே ஒற்றிவைத்து வாழ்வது ஏனே அறியோம். "மழைக்கணுர் தம்........செல்வர் தோள்" என்று கிழமைப் பொருளில் கூறுவது மேற்கூறிய கொள்கையை மறுப்பதும் காண்க. இராசமாபுரத்தைப் புனைந்துரைக்குமிடத்தையே இவ்விடத்திற்கு ஒப்பாகக்கொள்ளுதல் பொருத்தமுடையதாகும். அங்குப்போலவே இங்கும் மதிலும் அகழியும் பின் யானைகட்டுமிடங்களும் பின்னர் மாடங்களும் புனைந்துரைக்கப்படுவதைக் காண்க. 'நெடுங்கடை' என்று இதன்பின்னே வருவது நீண்ட கடைவாயிலையும் குறிக்குமாதலின் அங்காடி என்றே ஒரு தலைபாகக் கூறுதற்கில்லை. சிந்தாமணியைப் பின்பற்றிய சூளாமணி நடக்கவேண்டுமென்று கருதிப் பெரும்புலவர்களை எல்லாம் அடிமைகள் ஆக்க வேண்டுவதில்லை. ஆதலின் அங்காடியையேபுனைந்துரைக்கின்ருர் எனக் கொண்டு, கோயிற்புறத்திலும், 'பரத்தையரை வைத்துப்பாடத் தோலாமொழித்தேவர் விரும்பவில்லை என்று கொள்வதும் ஏற்புடையதேயாம்.

அறுத்து அமைத்த பளிங்குகளையே பலகைகளாகக் கொண்டு விளங்கும் மேடைகளின் விளிம்பிலே, எங்கும் காற்றிலே அசைந்து எங்கும் மணமூட்டித் தொங்கும் பூமாலைகளும், வண்டுகளும் அந்த நீண்ட கடைத்தெரு முழுதும் தோன்றுகின்றன. பல வளங்களும் மிக்க வானநாட்டுக் கற்பகக் காவணம் போன்றே விளங்கி வேண்டுவார் வேண்டியதே கொடுத்துநிற்கின்றது அக் கடைத்தெரு.

---



[அப்பொழுது அக்குரங்குகள் கலங்கிப் பயந்து மனம் உடைந்து நிற்கவும், முற்காலத்தில் பாற்கடல் கடைந்தபோது எழுந்தகொடிய விஷத்தைக்கண்டுதிகைத்ததேவர்களும்அசுரர்களும் பயம்நீங்கும்படிஅருளிய தாழ்ந்தசடையுடைய சிவபிரானைப்போல, "பயப்படவேண்டா, இங்கு இனிது இருங்கள்" என்று தேற்றி உதவி]

அஞ்சனைக் கொருசிறுவ னஞ்சனக் கிரியனைய
மஞ்சனைக் குறுகியொரு மாணவப் படிவமொடு
வெஞ்சினத் தொழிலர்தவ மெய்யர்கைச் சிலையரென
நெஞ்சயிர்த் தயன்மறைய நின்றுகற் பினினினையும்

[அஞ்சனையின் ஒப்பற்ற புதல்வனுகிய அநுமன், ஒரு பிரமசாரிவடிவம்கொண்டு நீலமலைபோன்ற இராமனுக்கு அருகுவந்து, ஒருபக்கமாக மறைந்து நின்று, "கொடிய கோபமுடன் போர்புரியும் வீரரைப் போன்றும், எனினும் தவசிகள் போன்ற சரீரமும் வேடமும் உடையவர்களாகவும், மற்று, கையில் வில்லை எந்தியவர்களாகவும் இருக்கின்றனர்" என்றுமனத்தில்சந்தேகித்து, பின் தன் கல்வித்திறமைகொண்டு சிந்திப்பவனுயினுன்]

முதற் பார்வையில் இராமலக்ஷ்மணர்கள் 'வெஞ்சினத் தொழிலர்' என்ன அநுமனுக்குத் தோன்றியது இயற்கையே. இவ்விரு பெருந்தகைகளும் போரினில் மட்டுமன்றி, சினமுடைய கொடுந்தொழில்கள் ஏனைய பிறவும் இயற்றுதற்குரிய மறவோராகி மாருதிக்குத் தோன்றியதன் நுட்பத்தை முன் பாசுரத்தில் காணல் வேண்டும். பார்ப்பவர்தம் மனம்போல்தோன்றுவார் மற்றவர். கடல்கடைந்த காலத்தில் நஞ்செழக்கண்ட அமரருக்கு அஞ்சலெனக் கூறிய தாழ்சடைக்கடவுள் என்னவே அநுமனும் 'அஞ்சல்' என அவ்வானரக் குழுவினைத் தேற்றினுன்எனக் கூறப்பட்டிருத்தலால், தனது ஆற்றலால் அவ்வானரர்களைத் தான்காக்க வல்லனுவது கருதினுனன்றி, வருமவர் வெருவரு வெந்தொழில் செய்புந் தரமுடையா ரல்லர் என்று அவ்வநுமன் முதலில் மதித்தானல்லன் என்பது தெரிகின்றது. வெஞ்சினத் தொழிலர் என இவன் தன் மனத்தில் நினைக்க மதிக்குமளவில், இதற்கு மாருக அவர் பூண்டுள்ள தவக்கோலம் அதனை மறுக்கின்றது. ஆயினும் அவர் கையில் இருந்தவில்லையால், பூண்ட அத்தவக்கோலம் மீண்டும் அயிர்க்கப்பெறுகின்றது. இன்னவாறு மாணவப் படிவங்கொண்டு வந்த மாருதியின் மனம் ஒருவழிப்படாமல் ஊசலாடுதலும், சாத்திரம் பலப்பல பயின்று முறைப்பட ஒன்றினைச் சிந்தித்து முடிவிற்குவரும் திறமையை அம்மாணவன் நனி பெற்றுளனாதலின், அவர்தோற்றத்தைப் பின்னும் அமைதியின் ஆராயப் புகுவானுகி,

தேவருக் கொருதலைவ ராமுதற் றேவரெனின்
மூவர்மற் றிவரிருவர் மூரிவிற் கரிவரை
யாவரொப் பவருலகின் யாதிவர்க் கரியபொருள்
ஏவலத் திவர்நிலைமை தேவர்வதெக் கிழமைகொடு

[தேவர்களுக்கெல்லாம்தலைவர்களாகியமுதன்மையான பிரம்மா விஷ்ணு சிவன்என்று இவர்களைஎண்ணினுலோ, அவர்களோமூவர், இவர்கள் இருவராக இருக்கின்றனர். அன்றியும் அம் மூன்று மூர்த்திகளுக்குரிய படைகளன்றி இவ்விருவரும் கரங்களில் வில்லையே தாங்கியிருக்கின்ருர். இவரை ஒப்பவர் யாவர்; இவ்வுலகில்இவர் செய்வதற்கரிய கருமம்யாது. இவர்களுக்குச் சிறப்பில்உரியதாயிருக்கின்ற எதனைக்கொண்டு யான் இவர்தம் தன்மையைத் தேர்ந்து கொள்வேன்]

என்று சிந்திப்பவனுயினுன். மெல்ல மெல்ல மாருதியின் மதிப்பு மாறுகின்றது. வெஞ்சினத் தொழிலர் என்னும் தோற்றம் விலகி,

சிந்தையிற் சிறிதுதுயர் சேர்வுறத் தெருமரலி
னைந்தயர்த் தவரனையர் நோவுறச் சிறியரலர்
அந்தரத் தமரரலர் மானிடப் படிவர்மயர்
சிந்தனைக் குரியபொரு டேடுதற் கொருநிலையர்

[மனத்தில் சிறிது துயரம் வந்தடைய அதனுல் கலக்கமடைந்து வருந்தித் தளர்ந்திருப்பவர்களை ஒத்திருக்கின்றனர். எனினும், கொந்த மனத்தினராய் வாழ்வதற்குரிய சிறு மானிடர் அல்லர்; எனினும், விண்ணிலுள்ள தேவர்களும்அல்லர், ஏனெனில், மனிதஉருவமுடையவர். மற்று, மயங்கிய தம் மனத்திற்குஉரிய யாதோ ஒருபொருளினைத் தேடுகின்ற நிலையில் இருக்கின்றனர்]

என்னும் எண்ணம் அநுமன் மனத்தில் எழுகின்றது. சிறிதே துயர் சேர்ந்தவரோ இவர்? சிறுதுயர் உடையவர் இவராயின், பெருந்துயர் இனி யாரிடை வைகுமோ? எனின், அங்ஙனதோர் தோற்றமே அநுமன் இவர்பால் அமையக்கண்டதற்குக் காரணந் தேர்த லருமை. கவந்தனும் சவரியும் செப்பியஇடந் தாம்சேர்ந்துளராதலின் இனித்தாம் சீதையைப் பெறுவர்என்ற சிந்தையால் முன்னிருந்த தெருமரல் ஒருவாறு ஆறியிருந்தனர்போலும். கையற வாடிவாடிச் சோர்தலின்றியே தேடித்தேடி நோக்குமொரு நிலையினை அவர் சிந்தனை சேர்ந்திருந்தது. இதனுடன், நோவுறத் தகுந்த சிறிய ரல்லாக் காட்சியும் கலந்து, சிறிதே துயர் உடையவ ரனையவர் என்னுந் தோற்றமே அநுமனது கண்களுக்கு அளித்ததென்னலாம். இவ்வாறு தாம் ஒரு துயர் உடையரேயன்றி வெஞ்சினத்தொழிலர் அல்லர் என்னும் எண்ணம் எய்தியவுடன், அதற்கேற்றபடியே அவர்பால் அநுமனது நன்மதிப்பும் உயர்கின்றது.

தருமமுந் தகவுமிவர் தனமெனுந் தகையரிவர்
கருமமும் பிறிதொர்பொருள் கருதியன் றதுகருதி
னருமருந் தனையதிடை யழிவுவந் துளதனை
இருமருங் கினுநெடிது துருவுகின் றனரிவர்கள்

[இவர்கள், தருமமும் நடுநிலைமையும் தங்கள் செல்வம் என்று கொள்கின்ற தன்மையுடையவர். இவர் இங்குவந்த காரியம் வேறுஒன்றையுங்கருதியன்று. மற்றுஎதுவென்று யோசிக்குமிடத்து, அருமையான அமிர்தத்திற்கு ஒப்பானது ஒன்று இடையில் நீங்கிவிட அப்பொருளை இருபக்கத்திலும் பெரிது தேடுகின்ருர்.]

எனத் துணிந்தவன். முன் செய்யுளில் அநுமன் கொண்ட கருத்தே இச்செய்யுளில் மீண்டும் வலியுறுத்தப் பெறுகின்றது. ஆதலின்,

கதமெனும்பொருண்மையிலர் கருணையின்கடலனையர்
இதமெனும் பொருளலதொ ரியல்புணர்ந்திலரிவர்கள்
சதமனஞ் சுறுநிலையர் தருமனஞ் சுறுசரிதர்
மதனனஞ் சுறுவடிவர் மறலியஞ் சுறுவிறலர். .

[கோபம் என்னும் அப்பொருளின் தன்மை தம்பால் இல்லாதவர். கருணையின் கடல்போன்றவர். இதம் செய்வதென்பதன்றி வேறொன்றின் தன்மையும் அறியாதவர். இந்திரனும் அஞ்சத்தக்க தோற்றமுடையவர். அறக்கடவுளும் அஞ்சத்தக்க ஒழுக்கம் உடையவர். மன்மதனும் அஞ்சத்தக்க வடிவழகு உடையவர். யமனும் அஞ்சத்தக்க வல்லமை யுடையவர்.]

என்னும்படி பின்னுந் துணிந்தவனுயினுன். "வெஞ்சினத்தொழிலர்" என்று துவக்கிய இம்மாருதி 'கதமெனும் பொருண்மை யிலர்" என அவ்வீரர்களை முரண்கொள மதித்து முடித்தவாறு இவ்வாறு. முரண்

உளதேனும் இம்முதிர்ச்சி, கான்போன் காணப்படுவோர் ஆகிய இவ்விருதிறத்தோர்தம் தன்மைகளுக்கேற்றவாறே நேர்ந்ததாயிற்று என்பதில் ஐயமில்லை. யாரும்எதனையும் முதலில் பிழைபட மதித்தல்கூடும். சிறியோர் மாறமாட்டார்; பெரியோர் தாம் கண்டது கொண்டுமேற் சில ஆராய்ந்து அவ்வாராய்ச்சியின் முடிவை ஏற்றுக்கொள்வர். அன்னது செய்தான் அநுமன். மற்று, மாறுபட்ட சிந்தையோடு வந்தவர்களையும் தன்வய மாக்கிக்கொள்ளும் தோற்றத்தன் இராமனுதலின், அநுமனைப் போன்ற நொதுமல்நிலையி லிருப்பவர்களைத் தன்பால் இணங்க இளக்கிக்கொள்ளல் அவனுக்கு அரியதன்று. மறைவிடம் நின்று ஓர் படுகொலைப் பகழிஏவிப்பின்னர் எதிர்வந்த இராமனை ஏசுவான் தொடங்கிய வாலி, "ஓவியத்து எழுதவொண்ணு வுருவத்தோய்" என்று அழைப்பானேயாயின், இலங்கையின்கண் முதல்நாள் போருடைந்து திரும்பிய இராவணன், "நாசம்வந் துற்றகாலை நல்லதோர் பகையைப் பெற்றேன்" என்று மனமுற மகிழ்ந்தான் போல்வியப்பானேயாயின், அவ்விருவரினும் கல்வியும் அறிவும் சான்றவனும், அவர்போலல்லாமல் இராமன்பால் பகையில்லாதவனுமாகிய அநுமன், கருணையின் கடலனைய இராமனது உருவமும், கதமெனும் பொருளுமில்லா அவன் நிலையையும் விரைவில் தேர்ந்து முன்னேதான் "வெஞ்சினத் தொழிலர்" என மதித்ததை மாற்றத் தாழவுந் தாழான்; மற்று, முதலிற்கொண்ட மதிப்பை மாற்றுதல் தன் மதியின் குறைவைக் காட்டும் என, சிறியோர் சிலர்போல, நாணவும் நாணமாட்டான்.

கடவுளைச் சிலர் அன்பினுல் ஆராய்வார்; சிலர் ஆராய்ச்சி செய்ததால் அன்பு சுரக்கப்பெற்றவ ராவார். அநுமன் இப்பொழுது இப் பின்னையநிலையி லிருக்கின்றுன் என்பதை,

> என்பன பலவு மெண்ணி
>     யிருவரை யெய்த நோக்கி
> அன்பின னுருகு கின்ற
>     வுள்ளத்த னுர்வத் தோரை
> முன்பிரிந் தனையர் தம்மை
>     முன்னினு னென்ன நின்முன்
> தன்பெருங் குணத்தாற் றன்னிற்
>     றுனல தொப்பி லாதான்

[தன் பெருமைவாய்ந்த குணங்களால் தனக்குத் தானே ஒப்பாவதன்றி வேறு ஓர் ஒப்பில்லாதவனுகிய அநுமன், இவ்வாறு பலபல வெண்ணி, அவ்விருவரையும் பொருந்தப் பார்த்து, அன்பினேடு உருகுகின்ற மனது உடையவனுகி, தான் அன்புவைத்திருந்த ஒருவரை முன்னேபிரிந்து பின்னர் எதிர்ப்பட்டவன்போல, நின்றுன்.]

என்னும் பாசுரத்தில் கம்பர் இனிது விளக்குகின்றுர். அன்பு உதிப்பதற்கு அடையாளமாவது பண்டு அறியாதார் யாருமில்லாமை. அன்னவாறே அநுமனுக்கு இப்பொழுது இராகவனுந் தோன்றுகின்றுன். முன்பிரிந்த ஒருவனை முன்னியதென்ன அநுமனது உள்ளம் நின்றதற்குக் காரணம் அன்புவந்து அடைந்ததேயாம். பண்டறிந்த பொருள் அக் கடவுள். ஆயினும், ஆராய்ச்சியால் அன்பு சுரந்தபின்னரே உறவெனநின்று மீண்டும் அக்கடவுள் அறிமுக மாகின்றது.

இக்நிலையினனுன அநுமனது கண்கள் இனி அவ் வீராமனைச் சூழ்ந்த செய்திகள் பல காணலாகின்றன.

> தன்கன்று கண்ட வன்ன
>     தன்மைய தறுகட் பேழ்வாய்
> மின்கன்று மெயிற்றுக் கோண்மா
>     வேங்கையென் றினைய வேயும்
> பின்சென்று காதல் கூரப்
>     பேய்கணித் திரங்கு கின்ற
> என்கன்று கின்ற தெண்ணிற்
>     பற்பல விவரை யம்மா

[அஞ்சாமையையும் பெரிய வாயையும் உடைய யானைகள் தம் கன்றுகளைக் கண்டனபோல் அன்புடன் இவர்களைத் தொடர்ந்துவருகின்றன. மின்னலிலும் மிகுந்த ஒளியுடைய பற்களையுடைய சிங்கம் புலிஎன்னும்இவைகளும் இவர்களுக்குப் பின்சென்று ஆசைகொள்ள, பேய்களும் இவர்களை நன்குமதித்துமனம்இரங்குகின்றன. என்னின் ஆலோசிக்குமிடத்து, இவர்களை என்னவென்று அஞ்சி நான் மனம் கவலவேண்டும்]

எனத் தேறுகின்றனன். "கரவுடைய நெஞ்சினர் இவராகி நம்மைத் துன்புறுத்தவே வருவாராயின் தறுகட் பேழ்வாய்க் கொடியவிலங்குகள் அவர்தமைத் தம்கன்றென அன்புடன் பின்பற்று அன்றே" என்று துணிகின்றுன். அதுவுமன்றி,

> மயின்முதற் பறவை யெல்லா மணிநிறத் திவர்கண் மேனி
> வெயிலுறற் கிரங்கி மீதா விருஞ்சிறைப் பந்தர் வீசி
> எயில்வகுத் தெய்து கின்றவின்முகிற் கணங்களெங்கும்
> பயில்வுறத் திவலை சிந்திப் பயப்பயத் தழுவும் பாங்கர்

[மயில் முதலிய பறவைகள்எல்லாம், அழகிய நிறத்தையுடைய இவர் மேனியில்வெயில் படுவதற்கு மனமிரங்கி, இவர்களுக்குமேல்தம்பெரிய சிறகுகளைப் பந்தலைப்போல் விரித்து, மதிலைப் போல் சூழ்ந்துகொண்டு வருகின்றன. ஆகாயத்திலுள்ள மேகக் கூட்டங்கள், எங்கும், நீர்த்துளிகளைச் சிந்திக்கொண்டு இவர் பக்கத்தில் மெல்லமெல்லச் சூழ்ந்து வருகின்றன.]

> காயெரி கனலுங் கற்கள்
>     கள்ளுடை மலர்க ளேபோல்
> தூயசெங் கமல பாதந்
>     தோய்தொறுங் குழைந்து தோன்றும்
> போயின திசைக டோறு
>     மரனொடு புல்லு மெல்லாஞ்
> சாய்வுறுந் தாழ்வ போலும்
>     இவர்களோ தரும மாவார்

[காய்கின்ற நெருப்பைவீசுகின்ற கற்கள், தூய்மையான செந்தாமரைபோன்ற இவர்பாதம் படும்பொழுதெல்லாம், தேன் உடைய மலர்கள்போல் நெகிழ்ந்து தோன்றுகின்றன. இவர் சென்ற திசைகளில் எல்லாம், மரம் புல் எல்லாம்இவர்களைவணங்குவனபோலச் சாய்ந்து நிற்கின்றன. எனின், தருமதேவதைகள் ஆவார் இவர்தாமோ.]

கல்வியால் கனிந்த அநுமன் எய்துவதற்குரிய முடிவே இது. வன்மையை மாற்றும் ஆற்றல் தருமத்தே வதிந்த தன்மையைத் தேர்ந்தனன். தருமத்தை நினைத்தவுடன் அடுத்தபடி நினைவிற்கு எட்டுவது வீடுபேறளிக்கும் கடவுளே யாதலின்,

> துன்பினைத் துடைத்து மாயத்
>     தொல்வினை தன்னை நீக்கித்
> தென்புலத் தன்றி மீளா
>     நெறியுய்க்குந் தேவரோ தாம்
> என்பெலக் குருகு கின்ற
>     திவர்கின்ற தளவில் காதல்
> அன்பினுக் கவதி யில்லை
>     யடைவென்கொ லறிதறேற்றேன்



# ஷேக்ஸ்ப்பியர்நாடகக் காட்சித் திரட்டு

[88-வது பக்கத் தொடர்ச்சி]

## ஜான் அரசன்

தாய்மையு கைம்மையுந் தழுவி நின்றவள்.

பிலிப்:—பிரிந்த பனிச்சையைப் [1] பிணையாய்! அவளது அளகபாரத் திரள்களின் அன்பை என்னென்பேன்! தவறியோர் வெள்ளியின் துளி விழுமிடத்து, அத்துளியைச் சூழ்ந்து, [2] கம்பியின் தன்மையேய்ந்த பதினுயிரம் நண்பர், உண்மையான இணைபிரியாத நம்பிக்கையுள்ள காதலர் இடுக்கணுற்றவிடத்து ஒன்று சேர்ந்து இழைவது போன்று, துன்பத்திற் றுணைகொண்டு, அணைந்துகொள்கின்றன.

கான்ஸ்:-வேண்டுமாயின் இங்கிலாந்துசெல்லலாம்.[3]

பிலிப்:—உனது குழலினை முடிப்பாய்.

கான்ஸ்:—ஆம்! அதைச் செய்வேன்; ஏன் அதைச் செய்யவேண்டும்? அவைகளைக் கட்டைவிட் டீர்த்து "இம்மயிர்கட்குச் சுதந்தரத்தைத் தந்ததேபோல், இக் கைகள் என் சிறுவனைச் சிறைமீட்கலாகுமோ?" என்று கதறினேன். ஆனால் இப்போது அவைகள் கொண்டுள்ள சுதந்தரத்தைக் கண்டு பொருமை கொள்கின்றேன். என் னிளங்குமரன் சிறைப்பட்டு இருப்பதால் இவைகளையும் தளைப்படுத்திப் பிணிப்பேன். ஐய! பாதிரியாரே! நாம் மேலுலகத்தில் நமது நண்பர்களைக் கண்டு, அவர்களை இன்னுரெனத் தெரிந்துகொள்வோம் என்று நீர் சொல்லக் கேட்டிருக்கின்றேன். அது உண்மையானல், மீண்டும் என் சிறுவனைக் காண்பேன். ஏனெனில், முதல் தலைப்பிள்ளையாகிய கேயின் [4] என்பவன் பிறந்ததுமுதல், நெருநற் பிறந்த பிள்ளையீருக இவ்வுலகில் அவனைப்போன்ற செம்மல் பிறந்ததில்லை. ஆனல் இனி, மலரிடை யுற்ற நோய்போல், துன்பமென்பது என் னரும்பைத் தின்று, அவனுக் கியற்கையாகிய அழகினை அவனது கதுப்பினின்றும் துரத்திவிடும். அதனல் அவன் பேயெனக் குழிந்த தோற்றத்தோடும், முறைச்சுரங்கொண்டவர்களைப் போல் மெலிந்தும், உருமாறியும் இறந்துபோவான். அவ்வாறே மீண்டெழுந்து மேலுலகஞ் செல்வானுதலால், துறக்கத் திருவோலக்கத்தில் நான் அவனைக் காணுங்கால், அவனை இன்னுனெனத் தெரிந்துகொள்ளேன். ஆகையால் இனி ஒருபோதும், எனது அழகிய ஆர்தரை நான் காணக்கூடாது.

பாண்டல்ப்:—நீ துன்பத்திற்குப் பெரியதோர் மதிப்பைத் தருவதால் கடவுள்முன் பிழையிழைத்தவள் ஆவாய்!

கான்ஸ்டன்ஸ்:—குழந்தையைப் பெருதவ னெருவனென்னிடம் பேசுகின்றுன் [5].

பிலிப்:—நீ உனது குழந்தைமேற் கொண்டதேபோன்றதோர் ஆசை துன்பத்தினிடமும் கொண்டுள்ளாய்.

கான்ஸ்:—துன்பமென்பது, என் வெற்றுள்ளத்தினுள் என்குழந்தைக்குரிய இடத்தைக்கொண்டு, அவனது படுக்கையிற்படுத்து, என்னுடன் இங்குமங்குமுலவி, அவனது சீருடைத் தோற்றத்தையெய்தி, அவனது மொழிகளை யுரைத்து, அவனது காதற் குணங்களை ஞாபகமூட்டி, அவனது வெற்றுடைகளில் அவனுருவத்தை யடைந்து என்முன்னே தோன்றச்செய்வதால், துன்பத்தினிடம் நான் அன்புகொள்ளக் காரண மேற்படுகிறது. யான் போய் வருவல். எனக்குற்ற துயர்போல் உங்களுக்கு நேரிடுமாயின், நீங்களெனக்குத் தருவதைவிட மேலான ஆறுதலையுங்களுக்கு நான் தருவேன். என் அறிவி லிதுபோற் குழப்பம் ஏற்பட்டிருக்க என் தலையின்மேல் இவ் வடிவைத்[6] தாங்கேன். ஓ இறைவா! என் சிறுவா! என் ஆர்தரே! அழகிய என் குமரா! என்னுயிரே! என் மகிழ்வே! என்னுயிரி னுணவே! என்னுடைய அளைத்துலகமே! கைம்பெண்ணின் ஆறுதலே! என் துயரின் மருந்தே!

(வெளிச் செல்கிறுள்)

உடல் ஆன்மாவுக்குச் சிறைச்சாலையெனுங்கருத்து இந்தியருக்கு மட்டுமன்றி ஆங்கிலேயர்களுக்கும் ஒத்ததே. ஆற்றெணுத் துயர்கொண்ட விடத்தும், கான்ஸ்டன்ஸ் தன் மனநிலை தடுமாருயல், தனது உண்மைநிலைமை யின்னதெனத் தெளிந்துகொண்டு நல்லுணர்ச்சியுடனும், பகுத்தறிவுடனும் பேசுவது வியக்கத்தக்கதாகும். இக்காட்சியின் ஆரம்பத்தில் "உங்களுடைய இணக்கத்தின்பயன் இன்னதெனப் பாருங்கள்" என்று அவள்கழறிக்கதறும்போது காரணகாரியவுணர்வழிந்து பேசுவதால், அப்பொழுதே அப் பெருந் துயருடையவள் சித்தம் மத்துறு தயிரிற் றிரிந்ததோ என்ன நாம் அயிர்க்கஇடமுண்டேனும் மானுடஇயற்கையில், தம் குற்றத்தைப் பிறர்மேற் சுமத்திப்

(1) பனிச்சை - பின்னிமுடிக்கும் மயிர்ச்சுருள்.

(2) Ten thousand wiry friends என்பது ஆங்கிலப் பாடம். wiry என்பது கம்பியின்தன்மைக்கும் வன்மைக்கும் சிலேடை.

(3) கான்ஸ்டன்ஸ் சொல்லும் மொழிகள் எதைக்குறிக்கின்றனவென்றுவிளங்கவில்லை. சிலர், அவள் தலைமயிரைப் பிய்த்தெறிந்து காற்றில்விடுத்து அதனைநோக்கி "இங்கிலாந்துசெல்" என்றுள் என்கிறுர்கள். வேறு சிலர், பிலிப்பரசன், "அம்மாகீழேஎன்னுடன்வா" என்றுசொன்னதற்கிது மறுமொழி என்கிறுர்கள். சித்தம் தடுமாறியிருக்கின்றநிலையில், சிலநேரங்கழித்து முன்சொன்னமொழிகள் ஞாபகத்துக்குவர அவைகளுக்கு உத்தரம்கூறுவது பித்துக்கொண்டவர் இயல்பு. இன்னுஞ் சிலர் பிலிப்பரசன், அளகபாரத்திரள்கள் துன்பத்திற் றுணைகொண்டு இணைபிரியாக் காதலர் போன்று அணைந்துகொள்கின்றன, என்பதற்கு உத்தரமாக, தானும் தன் பிள்ளையை விட்டுப் பிரியாதவளாதலால் அப்பிள்ளையின் இருப்பிடமாகிய இங்கிலாந்து செல்வோம் என்றுள், எனக் கருதுகின்றனர்.

(4) கடவுள் முதன்முதலில் ஆதாம் ஏவாள் என்பவர்களைப் படைத்தாரென்றும், அவர்களுக்குத் தலைப்பிள்ளையாகக் கேயினும், அவனுக்கிளையவனுய் ஏபலும்பிறந்தார்களென்றும் கிறித்தவ நூல்கள் கூறும்.

(5) காதோலிக் கிறிஸ்தவப்பாதிரிமார்கள் பிரம்மச்சரியர்கள்.

(6) இவ்வடிவு-என்பது தலையின்மேல் முடித்திருக்கும் குழலின் வடிவை என்பர். பிலிப்பரசன் விருப்பப்படியே அவிழ்ந்த குழலை முடித்தவள், பின்னும், தலைக்கேறிய வெப்பத்தைத் தாங்க இயலாது, தலைச்சுமையைப் பிய்த்தெறிகின்றுள்.

பேசுவது இயல்பாதலால் கவி அதைக் குறிப்பாய்க் காட்டினுரென்று கொள்ளக்கிடக்கின்றது. மெலிந்து சோர்ந்த தாய்மை, பிள்ளையை இழந்த ஒரு துக்கத்தால் நடைப்பிணமேபோலாகிப் போர்க்களத்தில் திரிந்து எல்லோர் நாக்கையும் தன்னிடத்தே கொண்டிருந்தது. முதலிலவள் நம்முன் தோன்றும்போது அவளிடம் துன்பமென்பதில்லை. அந்தக்காலே, தன் பிள்ளையின் உரிமையை அபகரிக்கஎண்ணினவர்மேல் வெஞ்சினக் கொடுங்கனலேயே வீசி நின்ருள். தன்பிள்ளை அரசனுக வேண்டுமென்று அவள் எண்ணினதும் பேராசையாலன்று; அவளுக்குத் தன் சிறுவன்பால் இருந்த அவாவின் மிகையாலென்க. அவள் பேசிய மொழிகள் யாவும் தாயின் தன்மையையே காட்டி நிற்கின்றன. ஆகவே, ஷேக்ஸ்பியர் இங்குக் காட்டப் புகுந்தவை, இறைவன் படைப்பில் உயர்திணைப்பொருளும் அஃறிணைப் பொருளும் தன் வயிற்றிற் பிறந்த மகவிடத்துக் காட்டும் அன்பும், அம்மகவைக் காக்கும்பொருட்டு மேற்கொள்ளும்முயற்சிகளும், அதை யிழத்தலால் அடையும் சினமும் துன்பமும், அதன் வளர்ச்சியிலும் முன்னேற்றத்திலும் அடைகின்ற மகிழ்ச்சியும் செருக்கும், ஆகிய இவ்வுண்மைகளையே எனக் கொள்க.

எல்லை கடந்த அவளது துயரின் கொடுமையானது மரணத்தையும் ஓர் கணவனுய் வரித்து அதனைத் தன் நிலைமைக்கேற்பத் துதிக்கவாரம்பித்துவிட்டது. வெறிகொண்டவள்போல் பேசிக்கழறியகாலத்தும் அவளது கற்பனுசக்தி குறைபவில்லை. அவளிடத்தில் இரக்கங்கொள்ளாமல், தான் நிற்கும் துன்பமற்ற உயரியநிலையிலிருந்து அவளைக் கடிந்துபேசிய பாண்டல்புக்குள திர் அவள்வெருகம்பிரத்துடன் எடுத்துக் கழறிய உத்தரங்கள் இரண்டும் அவனை நாணச்செய்யத் தக்கவையன்றோ? 'எனக்குப் பைத்தியம் பிடித்ததில்லை' யென்று அவள் சொல்லுங்கால் அவளுக்கு உண்மையிற் பித்தமே பிடித்துவிட்டதென்பர் ஒரு சாரர். ஆயினும் அது பித்தமல்லவென்பது மற்றொருசாரார் துணிபு. பிள்ளையை இழந்த மனக்குழப்பத்தால் முதலிற் சில பிதற்றினுளேனும், பின் செல்லச் செல்ல அக்குழப்பம் மாறித் தெளிவுடன் பேச ஆரம்பித்துப் பித்தத்திற்கும் தன்னிலைமைக்கும் உள்ள வேறுபாட்டைத் தானே தெளிந்து உரைப்பது அவளிடத்தில் நமக்கு ஒரு மதிப்பை யுண்டுபண்ணுகின்றது. பித்தங்கொண்டிருந்தால் கந்தைப்பொம்மையைப் பிள்ளையென்றெண்ணி விளையாடி மகிழ்வேனெனப் பித்தர் இயற்கையைக்கூறிநம்மனோர் இரக்கத்தையுங் கொள்ளைகொள்கின்ருள். அன்றியும், தனக்குப் பைத்தியம் பிடித்ததில்லை என்பதற்கு அவள் எடுத்துக்காட்டும் காரணங்கள் யாவும் உண்மையில் அவள் யோகநிலையில் நின்று தன்னுடலை விட்டுப் பிரிந்து அவ்வுடலிருக்கும் தன்மையைஉய்த்துணர்ந்து பேசுவதுபோல் உளவன்றோ?

இரக்கம் பெருகும்படி எழுதியுள்ள இப்பாகத்தினிடையே, பிலிப்பரசன் அவளது அளகபாரத்தைப்பற்றி வருணிப்பது, துக்கத்தினின்றும் நம் மனத்தை வேறோர் பொருளினிடைச் செலுத்துவதற்காம். தலையில் ஓர் வெண்மயிர் உண்டாகுமாகுல் வெகு விரைவில் அதனைச் சூழ்ந்துள்ள பாகத்திற் பல வெண்மயிர்கள் தோன்றுவதைக் கவி வருணிப்பது பொன்னேபோற் போற்றத்தக்கதே. சிறியதும் சாதாரணமானதுமான விடயங்களில் தம் புலமையைச்செலுத்தி அவைகளில் உள்ள உண்மைகளை அழகுபடப் புனைந்துரைப்பதே உத்தமக் கவிஞர்களின் சிறப்பாம். அஃதன்றியும், உருமாறிய அவள்பிள்ளை உயிர்த்தெழுந்தால், தான் அவனைக் கண்டுகொள்ளாதபடி மாறியிருப்பாளுதலால் அவனைத் தான் காண்பது கூடாதென்று அவள்கூறுமிடத்து உள்ளுடைந்த அவள் மனம் அழுங்கும் நிலையை என்னென்பது? பொறுக்கமாட்டாதபடி அவள், வார்த்தைகளை மீட்டும்மீட்டும் எடுத்துரைப்பதை நண்பர்கள் காண்பாராக.

இறுதியாக, "துன்பமென்பது என்னுள்ளத்திற் குழந்தைக்குரிய இடத்தைக் கொண்டு'......" என்று அவள் கூறிமுடிக்கின்ற பாகம் கேட்போர் மனத்தை அள்ளிக்கொண்டு பரவசமாக்க வல்லதோர் வகையிற் செறிந்த அவலச்சுவை வாய்ந்தது. அவ்வாறு பிள்ளையை யிழந்த பேதையர் கதறிக் கரைவதையாம் அனைவரும் பலமுறையுங் கண்டுகேட்டிருக்கிறோம். அதனை இயற்கை மாருது எடுத்துரைத்துக் கல்லுங்கரையவரைவது ஷேக்ஸ்ப்பியருக்கே அமையும். இப்பாகத்தை யிங்கிலாந்தில் நடிக்கும் சீமாட்டி ஒருத்தி "என் சிறுவா! என ஆர்தரே! என்குமரா! என்னுயிரே" என்றுமிடத்துப் பையப்பையப் பரிணமித்த குரலுடன் என்னுயிரே என்று வீறிட்டு முடிக்கும்போது கேட்போ ரனைவரும் விம்மியும் கதறியும் அழுவார்களாம். இவ்வாறு கதையொன்றை யுண்மைச்சம்பவமாகத் தோன்றும்படி செய்து, மனிதரது உள்ளத்தை யுருக்கும் வன்மைவாய்ந்தவர் ஷேக்ஸ்பியரேயன்றி வேறெவரு மிலரென்று உறுதியாய்ச் சொல்லலாம்.

சரித்திரத்திற் காணப்படும் உண்மைக் கான்ஸ்டன்ஸ் கைம்பெண்ணுகவே இருந்துவிடவில்லை. அவள் ஆங்கிலேயர் வழக்கத்திற்கேற்ப இரண்டாம்முறை விவாகம் செய்துகொண்டவள். மேலும் அவள் ஆர்தர் சிறைப்படுவதற்கு ஓராண்டு முன்னரே இறந்துவிட்டாள். இவளைக் கைம்பெண்ணுகவும், பிள்ளைக்காகப் பிரலாபிக்கும் பேதையன்புடைப் பெண்ணுகவும் புனைந்துரைத்து ஓதுவோர் மனத்தைத் தன் கருத்திடையிறுத்தி, அது இளகி நைந்துருகச்செய்யும் ஷேக்ஸ்பியரின் புலமைத் திறத்தை வியக்காதவர் உலகிலுண்டோ?


# ஏமாங்கதத் திளவரசன்

ஸ்ரீமான் T. N. சேஷாசல ஐயர் B.A., B.L.,

எழுதியவோர்

**செந்தமிழ்க்காதை.**

கலாநிலயம், வேளாளர் வீதி, புரசைபாக்கம், சென்னை. விலை ரூ. 1—4—0




# ஸ்ரீ தியாகராஜ கீர்த்தன மணிமாலை.

## காஞ்சீபுரம் ஸ்ரீ வரதராஜ ஸ்வாமி ஸ்தோத்திரங்கள்

[94-வது பக்கத் தொடர்ச்சி]

6. இராகம்—கேதார கோளம்.] [தாளம்—ஆதி.

பல்லவி

வநஜ நயனுடனி வலசிதிவோ—வாநி
மநஸுந தயலேதே—வாடு.........................(வநஜ)

அநுபல்லவி

முநுபடி சரிதமுலனு விநியுந்நாவு
வநிதஸ்வ பாவமோ வெலயு ஸ்ரீ தேவராஜுடு.......(வநஜ)

சரணம்

ஒருல பா தலனு ஓர்வக யுண்டுடயே
பரம தர்மமநி பாகுக பல்குசு
வரதுடு ஆப்ரித வத்ஸலு டநி பேரே
தாணிஜாலோனுடு—த்யாக ராஜார்ச்சிதுடு...........(வநஜ)

போருள்

(பெண்ணே!) வாடு - அவன், வநஜ நயனுடு அதி-செந்தாமரை யிதழையொத்தகண்களையுடையவனு யிருக்கின்ருனென்று, வலசிதிவோ - (அவனிடம்) பிரேமை கொள்ளுகின்ருயோ? வானி மநஸுந - அவனுடைய மனத்தில், தய லேதே - தயை யென்பதே யில்லையே.

முநுபடி சரிதமுலனு - பூர்வத்தில் ஏற்பட்ட அவனுடையவிருத்தாந்தங்களை யெல்லாம், விநியுந்நாவு-நீ கேட்டிருக்கின்ருய்; (இருந்தும் நீ அவனிடம் பிரேமை கொள்வது), வநித ஸ்வபாவமோ - பெண் தன்மையினுல் தானே?' வெலயு ஸ்ரீதேவ ராஜுடு - பெருமையுடன் விளங்கிப் பிரகாசிக்கும் தேவராஜன், (வநஜ...வலசிதிவோ - தாமரைக் கண்ணனென்று மயங்குகிருயோ?)

ஒருல பாதலனு - ஒருவருடைய கஷ்டங்களை, ஓர்வக உண்டுடயே - (பார்க்கச்) சகிக்காமலிருப்பதையே, பரம தர்மமு அநி - உத்தமமான தருமமென்று, பாகுக - நன்ருக, பல்குசு - சொல்லிக்கொண்டு, வரதுடு - வரதன் (அநாவது வரங்களைக் கொடுப்பவன்), ஆச்ரித வத்ஸலுடு - பக்தர்களைத் தாய்போல் காப்பவன், அநி - என்று, பேரே - பேர்மட்டும் படைத்திருக்கிருன். தரணிஜாலோனுடு - (பூமிப் பிராட்டியின் திருமகளான) சீதைக்குக் கணவனும், த்யாகராஜ அர்ச்சிதுடு - தியாகராஜனுல் கொண்டாடப்பட்டவனும் (ஆன தேவராஜன்), (வநஜ......வலசிதிவோ—கமலக் கண்ணனென்று மயங்குகிருயோ ?).

குறிப்பு:—இந்தக் கீர்த்தனை, வரதராஜப் பெருமானை தலைமகன்மீது காதல்கொண்டா ளொரு நங்கையை நோக்கி அவள் தற்ருய் கூறுங் கூற்ருக அமைந்துள்ளது. அன்றியும் இது ஒரு நிந்தாஸ்துதியாகவும் விளங்குகின்றது. ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகள், அகப்பொருளைப்பற்றியதமிழ் நூல்களிற்பயிற்சி மிக்குள்ளவராயிருந்தா ரென்பதை, இந்தக்கீர்த்தனத்தினுல் நாம் அறியலாம். இதன் அரிய கருத்தும் த்வன்யார்த்தங்களும் எப்படிப்பட்டவர்களுடைய மனத்தையும் பரவசப் படுத்துமென்பதில் ஐயமில்லை.

### கேதாரகௌள ராக லக்ஷணம்.

இந்த ராகம் 72-வது மேளகர்த்தா முறையின்படி 28-வது மேளகர்த்தாவாக விளங்கும் ஹரிகாம்போஜியின் ஜன்யம். ஔடவ ஸம்பூர்ண ராகம். ஆரோஹணத்தில் காந்தாரமும் தைவதமும் வர்ஜம். சதுச்ருதி ரிஷபமும் காகலி நிஷாதமும் இராகச் சாயா ஸ்வரங்கள். ஆரோஹணத்தில் நிஷாதத்தையும், அவரோஹணத்தில் [illegible] தீர்க்கமாகவும் கமகமாகவும் படிப்பதுலேயே இந்த ராகத்திற்கு விசேஷ ரக்தியுண்டாகின்றது. இது எப்போதும் பாடத் தகுந்தது.

ஆரோஹணம்:—ஸரி மபநிஸ.
அவரோஹணம்:—ஸநிதப மகரிஸ.

### ஸ்வர ஸாஹித்யம்.

ஸம்ஜ்ஞா விவரணம்

, — இது ஒரு களையைக் காட்டுகிறது.
; — இது இரண்டு களைகளைக் காட்டுகிறது.
| — இது தாளத்தின் மத்தியிலுள்ள தட்டுக்களைக் குறிப்பிடுகிறது.
|| — இது தாள ஆவர்த்த முடிவைக் காட்டுகிறது.
* — இது பாட்டுத் தொடங்கு மிடத்தைக் குறிப்பிடுகிறது.

ஸரிகம— பாட்டின் நடை எந்தக்காலத்தில் உள்ளதோ அதன் நடுவில் துரிதகால ஸங்கதி வருமிடங்களில் இவ்வாறு கோடிடப்பட்டிருக்கும்.
ஸரிகம— மேற்படி ஸம்ஜ்ஞையிற் கூறப்பட்டிருக்கும் துரிதகாலத்துக்கும் துரிதமான காலத்தை இந்த இரட்டைக் கோடு குறிக்கும்.
பதநி—தடித்த எழுத்தில் உள்ள ஸ்வரங்கள் கீழ் ஸ்தாயியைக் குறிப்பிடும்.
ஸ்ரீகம—மேலே புள்ளியுள்ள ஸ்வரங்கள் மேல் ஸ்தாயியைக் குறிப்பிடும்.

[குறிப்பு:—இந்தக் கீர்த்தனம் உகளைச் சவுக்க காலத்தில் பாடப் படவேண்டும்.]

பல்லவி

| | | | |
|---|---|---|---|
| ;; * ஸ்ாஸ்ா; - நிதபா; - மாபாதபா - மாகா - மகரிக | ஸா ;; - ஸாஸாரிமா; | பா ;;; - மாகாரிமா | \|\| |
| ;; * வ ந ; - ஜ . ந; - ய . நு . - ட . - நி . . . | . ;; - வலசிதி ; | வோ ;;; - வா . நி . | |
| பாநி* ஸ்ா ஸ்நிரிஸ்நிதபா ; - மாபா நிததப மாகா மகரிக | ஸா ;; - ஸாஸாரிமா; | பா ;;; - மாகாரிமா | \|\| |
| . . * வ ந . . . ஜ . ந ; - ய . நு . . . ட . நி . . . | . ;; - வல சிதி ; | வோ ;;; - வா . நி . | \|\| |
| பாநி* ஸ்ாஸ்ா ; நிதபா ; - மாபா - நிததப - மாகாரிகா | ரீ ;;; - ;; - ஸா நி | ஸா ;;; - மாகாரிமா | \|\| |
| . . * ம ந ; ஸு . ந; - த . - ய . . . - லே . . . | தே;;; - ;; - . . | . ;;; - வா . நி . | \|\| |

பாநி*
. . * (வநஜ நயனுடனி)

அநுபல்லவி

;;;* ஸ்ாநீஸ்ாரீ ; ரீரீ க்ாரீ - ஸ்ாநி - ஸ்ரிம்க் | ரீ ;; - நீஸ்ாரீஸ்ா ; | ஸ்ாநீதாபா - மாபாநீநீ ||
;;;* முநுபடி ; ச . ரி . - த . - மு . . . | . ;; - லனுவிநி ; | யு . . . - . . . . ||

ஸா ;;* ஸ்ாநீஸ்ாரீ ; - ரீரீ ப்ாம்ா - க்ாரீ - ஸ்ரிம்க் | ரீ ;; - நீஸ்ாரீஸ்ா ; | ஸ்ாநீதாபா - மாபாநீநீ ||
ந்ந ;;* முநுபடி ; - ச . ரி . - ந . - மு . . . | . ;; - லனுவினி ; | யு . . . - . . . . ||

ஸா ;;* நீஸ்ாரீஸ்ா ; - ஸ்ாநீதாபா - மாபாநீக்ா | ரீ ; - ஸ்ாஸ்ா ; நிதபா ; | மாபாநிதநப - மாகா - ரிபமக ||
ந்ந ;;* வரிதஸ்வ ; - பா . . . - வ . . . | மு ; - வெல ; யு . ஸ்ரீ ; | தே . வ . . . - ரா . - ஜ . . . ||

ரிமபரி *
டு . . . * (ஜெஜயஜடனி)

சரணம்

;;* பாநி ; தாபா ; - மாபா நித தப - மாகா - ரிபமக | ரிகாஸ, - ரீ ; மா பா ; | பா ; தபமா ; பாபா ; ||
;;* ஒரு ; லபா ; - த . . . . . - ல . . - நு . . . | . . . , - ஜ ; ர்வக ; | யுஸ் ; டு . . ; டயே ; ||

;;* பாபா ; ரீஸ்ா ; - நிதப மகரீ ,; - ரீரீ ; | ; ஸா ; நிதபா ; | பா நிஸரீ ; ரீ ரீ ; ||
;;* பர ; மதர் ; - ம . . . . . ,; - மரி ; | ; பா ; கு . க . ; | ப . . ல் ; கு சு ; ||

"வரதநு......த்யாகராஜா ர்ச்சிதநு" அனுபல்லவியைப் போல் பாடவேண்டும்.

# மதுரைக் கோவை

[92-வது பக்கத் தொடர்ச்சி]

குறையுறவுணர்தல்

தோழி ஐயுறுதல்

மலைபெற்ற செஞ்சிலை யார்மது ரேசர்
வரையில்வஞ்சக்
கொலைகற்ற விற்புரு வக்கொடி யிர்குறை
கோடியென்பர்
கலைகெட்ட தென்ப ரிடைதெரி யாதென்பர்
கட்டுரைக
னிலைபட்ட தொன்றல வானினி வேதிவர்
நெஞ்சினுக்கே. 93.

இருவரு முள்வழி யவன்வர வுணர்தல்

கலையென் றனரொரு காலொரு கால்வெங்
கடங்கொழிக்கு
மலையென் றனர்மனம் வந்ததென் றூர்மது
ரேசர்வெற்பர்
முலையென் றனர்சொன்ன தெல்லா மறைத்து
முடிவிலிடை
யிலையென் றனர்வெளிக் கேநல்ல மாய
மிவர்கற்றதே. 94.

நாற்றம்.

*கங்கைச் சடிலர் மதுரா[1] புரேசர்
கடம்பவனத்
தெங்கட் குளதன்றி யெங்குள [2]தோவிவட்
காரமும்பூந்
தொங்கற் புறமனை யூந்திருப் பாவைபொற்
றோளுமிரு
கொங்கைக் குவடு மளகா டவியுங்
குடிகொண்டதே. 95.

தோற்றம்.

தோளிற் குழைவுங் களபா சலந்தரு
[3]சோலையுமை
வாளிற் [4]புருந்த விரகுங்கண் டாற்சந்த்ர
வட்டங்கொண்ட
கோளிற் றிகழ்குடை யார்கூடல் வாழுங்
கொடியிடைக்கு
நாளிற் [5]சிறந்து சிறந்தொரு கோடி
நலந்தருமே. 96.

ஒழுக்கம்.

கந்தா டியகளிற் றூர்க்கடம் பாடவிக்
[6]காவிடையே
வந்தா [7]ரொழுக்க வழக்கென் சொல் வேல்வண்ட
லாடலும்பூஞ்
சந்தாடு சோலை மணியூச லாடலுந்
தண்டரளப்
பந்தா டலுமறந் [8]தார்நினைந் தாரென்
பயில்வதற்கே. 97.

உள்ளடி.

பெருந்தா மரைப்பதம் போற்றிநிற் பார்பிற
விப்பிணிக்கு
மருந்தா கியபெரு [9]மாள்மது ரேசர்
வரையிலிந்தக்
கருந்தாரை வேற்கண்ணிக் கென்னகண் மாயங்
[10]கலந்ததன்ட
ருந்தா வமுதருந் தப்புருந் தாலு
மருந்திலளே. 98.

செய்வினை மறைத்தல்.

யாமேபு மின்றி யினவாய வெள்ளமு
மின்றியிவர்
தாமே புரியுந் தவமென் கொலோதண்
டரளமணி
வாமே [11]கலைத்தம் பிரான்மது ராபுரி
வையைசுற்றும்
பூமேவு சோலையுஞ் செய்குன்று மாகப்
[12]பொலிந்தனின்றே. 99

செலவு.

கரிக்கும்ப கும்பக் கடாசலந் தார்கடம்
பாடவிமான்

* இது முதல் 'வன்னந்தரு' (செய். 101) என்பதன் இறுதியாகவுள்ள செய்யுட்கள் இலக்கணவிளக்கவுரையில் (பக். 417) எடுத்துக் காட்டப்பெற்றுள்ளன.

(பி - ம்) 1. புரேசர். 2. தோவின. 3. சோலையும் மை. 4. சிறந்த விழியுங் கண்டாற் சசிவட்டமென்றும்.

(பி - ம்) 5. புதுமை. 6. காவின் மின்போல். 7. ளொழுக்க. 8. தாளென்னபாவம் பலித்ததுவே. 9. மான்மது. 10. கலந்ததென்று-மருந்தா மமுதருந். 11. கலைப்பங்கர் வாழ்மதுராபுரி. 12. புருந்தனின்றே.



பரிக்கும் [13]பரிபுர மார்ப்பமுன் னேடும்
பதமலர்கள்
விரிக்குந் தவிசுங் கொடுங்கான கூட
விடவரவந்
தரிக்குந் திருவி னுடனுங்கன் றூநடை
தந்தனவே. 100.

பயில்வு.

வன்னந் தருமவு லிச்சொக்க நாதர்
மதுரையிள
வன்னந் தனிநடை [14]கற்பநிற் பாடன்
னமுதச்செவ்வாய்
இன்னந் துணைமுலைப் பால்மணம் போயின
தில்லையிவள்
தன்னந் [15]தனி[யே] துயில்கற்ற வாவென்பர்
தாயருமே. 101.

தலைவன்றறிப்பறிதல்.

மகங்கண்ட வாசவன் பொற்புண்ட ரீக
மலர்கொண்டெண்ணி
யுகங்கண் டிடையை வணங்கிநிற் பார்தென்ன
ரோடுறவாய்ச்
செகங்கண்ட நீதித் திருவால வாயர்
சிலம்பில்வல்லி
முகங்கண்ட போது முடிவென்சொல் வேனண்ணல்
மோகத்தையே. 102.

தலைவிதுறிப்பறிதல்

கனத்தே யணவுங் கடம்பா டவியர்
கவுரிசெம்பொற்
றனத்தே கடைக்கண் டாவிருப் பார்தடஞ்
சாலினம்
புனத்தே குரிசில் தலைப்படும் போது
பொருமிவல்லி
மனத்தே துளும்பும் விரகெங்ங னேசொல்ல
வாய்திறந்தே. 103.

இருவர் துறிப்பு முணர்தல்.

மங்கைப் பருவத் திவள்காவ லேனலிவ்
வள்ளலிரு
துங்கக் களபப் புயாசலத் தேயலை
தூற்றுபுனற்
கங்கைச் சடிலர் கடம்பா டவியிலிக்
கன்னியிரு
கொங்கைக் குவட்டிடை யேயவர் தேடிய
குஞ்சரமே. 104.

துறையுற வுணர்தல் முற்றும்.

(பி - ம்) 13. சிலம்பு சிலம்பு பொற்பாதம் பதுமமலர்-விரிக்குந் தவிசின் மெலநடந்தாலு மெலிவதாத்-தரிக்குந் திருவுடலுங் கன்றவே நடைதந்ததுவே. 14. கற்பநின்றுடன். 15. தனிபயிலக் கற்றவாறென்கொல் சாற்றுவதே.

## கல்வியில்லாக் குறை

அந்த வருடம் நாடெங்கும் நல்ல வளம். நரிகளெல்லாம் நன்றாகத் தின்று கொழுத்திருந்தன. காகிதத் துண்டுகள் சில தரையில் இரைந்து கிடப்பதைக் கண்டவுடன், தமக்குள்ளே ஒரு தலைவனைத் தேர்ந்தெடுத்துக்கொள்ளலாம், என்று நினைத்து, அதன்படியே வோட்டுப்போட்டு முடிந்தவுடன், வெற்றிபெற்ற ஒரு கிழநரியின் இடத்தில் ஒரு காகிதக்கட்டைக்கொடுத்து, "நீ எங்குப்போனாலும் இதனை உன்னுடனேயே வைத்துக்கொண்டிரு; ஏனென்றால், நீ எங்களை ஆள்வதற்குவேண்டிய அதிகாரம் அதனில் அடங்கியிருக்கின்றது" என்று மற்ற நரிகள் கூறின. அச்சமயம், "அரசருக்குக் கிரீடம் உண்டு. ஆகையால், எல்லாரும் அறியும்படி நம் தலைவனுக்கும் ஒரு அடையாளம் வேண்டுமே" என்று ஒரு நரி தன் எண்ணத்தைத் தெரிவித்தது. "ஆயின், அதன் வாலில் இந்தப் பழங் கூடையைக் கட்டலாம்" என்றது ஒரு முதுநரி.

இவ்விதம், அதிகாரப் பத்திரம் கையிலும், இறுகக் கட்டிய கூடை வாலிலுமாக அந்த நரித்தலைவர் எழுந்தபோது, அந்தக் கிராமத்தில் இருந்த நாய்கள் இந்நரிகளைச் சூழ்ந்துகொண்டு துரத்த ஆரம்பித்தன. அப்பொழுது நரிகளெல்லாம் ஓடி வளைகளுக்குள் புகுந்துகொள்ள, தலைநரியின் வாலில் கட்டிய அப் புதிய அலங்காரக்கூடை வளையின் வாயிலில் சிக்கிக்கொண்டதால் அது உள்ளே போகமாட்டாமல் தவித்தது. அப்பொழுது, உள்ளே இருந்த ஏனைய நரிகள், "உள்ளே வா, எங்கள் தலைவா, உள்ளே வா" எனக் கூவின.

"மிக்கவந்தனம். எனக்கு நீங்கள் கௌரவம் அதிகம் செய்துவிட்டீர்; நீங்கள் கொடுத்த அரச சின்னம் என்னை நாய்களின்கையில் காட்டிக்கொடுக்கின்றதே" எனத் தேர்தலில் வெற்றிபெற்ற தலைமை நரி அழத் தொடங்கியது.

"ஆயின், அந்த அயோக்கிய நாய்களுக்கு உன் அதிகாரச்சீட்டைக் காட்டு" என்றன உள்ளிருந்த நரிகள்.

"அதுவேதான் செய்தேன். ஆயினும், இந்தக் கிராமாந்திர நாய்களுக்கு ஆரம்பக் கல்வியும் இல்லாமையால் படிக்கத் தெரியவில்லையே.........ஏ முழு மூட நாய்களே.........

வௌ வௌ.........பெரிய ஊளை......எல்லாம் ஓய்ந்தது.

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட்ஸ் நஞ்சன்கூடு "சத்வைத்யசாலை" மருந்துகள்
"ஆல்மஸ்ரடைன்" (டானிக்). "பாலக்ஸ்" பேதியாத்திரை. "ஸ்பீவிவரால்" (குழந்தை கட்டிக்கு)
சுமார் 300 போலிகள் ஏமாற்றும். [illegible] தயவுசெய்து கவனித்து வாங்கவும்.
[பல்மக்கள் வைத்தியர்களுக்கு மட்டும்.] [அட்வான்ஸுடன் ஆர்டர் செய்யவும்.]

199157

KALANILAYAM
REG. NO. M. 2324.

# வர்த்தமானம்

செட்டிநாட்டுக்

## கலாநிலயக் கல்விக் கழகம்.

இக் கழகத்தின் அடுத்த வகுப்பு, கானாடு காத்தானில் மே மாதம் 12, 13-ம் தேதிகளிற் கூடும். (சனிக்கிழமை, ஞாயிற்றுக் கிழமை.)

அவ்விரு தினங்களிலும் மாலை 6 மணிக்குக் காரைக்குடியில், S. M. S. ஹைஸ்கூல் கட்டிடத்தில் . ஸ்ரீமான் T. N. சேஷாசல ஐயர், B.A., B.L., கம்பராமாயணக் கட்டுரைகள் நிகழ்த்துவார்.

---

உடனுக் குடனே தண்டனை:—ஜெர்மனியில் வீதிகளை உபயோகிப்பவர்கள் வீதி விதிகளுக்கு மாறாக நடந்துகொண்டால் அவர்களை உடனுக்குடனே தண்டிக்கப் போலீஸிற்கு அதிகார மளிக்கப்பட்டிருக்கின்றது. பாதசாரி எவரேனும் நடைபாதையை விட்டுக் குறுக்கே விழுந்தோடினால் அங்கு நிற்கும் போலீஸ் ஆள் அவரிடமிருந்து உடனே 50 சதம் அபராதம் வசூலிப்பார். சைக்கிள் ஓட்டுபவர் தவறு செய்தால் அவர் வண்டியில் ஓர் குறியிடப்படும். மோட்டார் ஓட்டி அதிக ஓசை செய்தாலும் அல்லது வேறெவ்விதத் தப்பிதம் செய்தாலும், அதனை எடுத்துக்காட்டும் போலீஸ்காரர்களிடம் அதற்கு விதிக்கப்பட்டுள்ள தொகையைக் கொடுத்தாக வேண்டும். அடுத்தடுத்துக் குற்றம் செய்பவர்களின் வாகனம் போலீஸாரால் கைப்பற்றப்பட்டுவிடும். அதன் சொந்தக்காரர் அப்பால் வீட்டிற்கு நடந்து போக வேண்டியதே. பிறகு போலீஸ் நாளுவிற்குச் சென்று விதிக்கப்படும் அபராதத்தைச் செலுத்திவிட்டு வாகனத்தை மீட்டுக் கொள்ளலாம்.

* * *

உலகப் பொது பாஷை:—பேச்சும், எழுத்தும் உலகில் தோன்றிய காரணத்தைச் சென்ற பத்து வருஷங்களாக ஆராய்ச்சி செய்தவர் ரிச்சர்ட் பேஜட் என்பவர் சில புதிய அதிசயங்களைக் கண்டுபிடித்திருக்கிறார். ரப்பர்க்குழாய்த் துருத்தி, அட்டை தகடு முதலிய சில கருவிகளைக் கொண்டு மனிதன் பேசுவது போல் தொனி ஏற்படச் செய்யலாமென்று அவர் கூறுகின்றார். இதனைச் செவிடர்களும் ஊமைகளும் உபயோகிக்கலாம். இரண்டாவதாக, உலகத்திலுள்ள எல்லா மாந்தரும் எப்பாஷையின ராயினும், சுலபமாகத் தங்கள் மனத்திலிருப்பதைத் தெரிவிக்க ஒரு உபாயத்தையும் அவர் தெரிந்துகொண்டிருக்கின்றாராம். குழந்தைகளையும், ஊமை, செவிடர்களையும் கவனித்ததனால் இது சாத்தியமாகியிருப்பதாகக் கூறப்படுகின்றது. பாஷை விளங்க வேண்டுமானால், இலக்கண இலக்கியம் அவசியமில்லை யென்பதாகவும், சமிக்ஞை மூலமாகவே சில எண்ணங்களை வெளியிடலா மென்றும் அவர் கூறுகின்றார். இவர் இன்னும் 10 வருஷங்களுக்குள் இவ்வித சமிக்ஞைப் பாஷையை உலகவியாபக மாக்கிவிடப் போவதாகக் கூறுகிறார்.

* * *

இரத்தச் சகாய சங்கம்:—பிணியாளிகளில் எவருக்கேனும் தேகம்குணமடைய இரத்தம் தேவையாயின், மற்றொருவர் உடலிலிருந்து அவர்களுக்கு இரத்தம் பாய்ச்சுவது இக்கால வைத்திய முறைகளில் ஒன்றாகும். அவ்விதம் தேவைப்படும் போது தந்நலம் பாராமல் இரத்தசகாயம்செய்வதற்குப் பிரியமுள்ளவர்கள் ஒன்றாகக் கூடி ஒரு சங்கம் ஏற்படுத்திக்கொண்டிருக்கின்றனர். இச்சங்கம் செஞ்சிலுவைச் சங்கத்தின் ஓர் அம்சமாகும். இது வரையில் இதனில் 20 அங்கத்தினர்கள் இருக்கின்றனர். இவர்களில் 10 பேர் மாத்திரம் 400 பேர்களுக்குக் குறையாது இரத்த தானம் செய்திருக்கின்றனர். இவர்கள் உலகின் எந்தப் பாகத்திற்கு அழைக்கப்பட்டாலும் அங்குச்செல்லத் தயாராக விருக்கின்றனர். சென்ற வருஷம் மாத்திரம் 3017 பிணியாளிகளுக்கு இரத்தம் தேவையாகவிருந்தது. அதற்கு முந்திய ஆண்டில் 2442 பேர்கள் பிறருடையஇரத்த உதவி பெற்றுக் குணமடைந்திருந்தனர். இதனை அறிந்தே இச்சங்கம் நிறுவப் பட்டுளது.

NATIONAL
INSURANCE COMPANY, LIMITED.
Head Office:
NATIONAL INSURANCE BUILDING,
362, China Bazar Rd, Esplanade, Madras.

1933 Results.

New Business Completed exceeds ... ... Rs. 1,67,00,000
The Company with a steady progress all round.
All forms of life assurance policies issued at low safe rates of premium.

Specialities.

Female Lives
Joint Lives
Permanent Protection Policies
Triple Benefit Policies.
Marriage & Future Provision Policies.

For agencies please apply to:—
T. ANANTACHARI, Branch Secretary, 362, China Bazar Road, Esplanade, Madras. OR R. G. DAS & Co., Managers.

Consult
NATIONAL FIRE
AND
GENERAL INSURANCE COMPANY Ltd.,
Head Office:—
NATIONAL INSURANCE BUILDING,
362, China Bazar Rd, Esplanade, Madras.
for Fire, Motor & Accident policies.

A sound Company.
Please apply for particulars to:—
T. ANANTACHARI, Branch Secretary, 362, China Bazar Road, Esplanade, Madras. OR R. G. DAS & Co., Managers.

கோடையின் கொடுமை
நீங்கள் ஆயுர்வேத முறைப்படி செய்யப்பட்ட
எங்களுடைய
மணி தைலத்தை
உபயோகித்தீர்களா ?
மூளையைக் குளிரச்செய்து கை கால் கண்களின்
எரிச்சலைச் சமனஞ்செய்து தலை மயிரை நீண்டு
வளரும்படி செய்யும். உடனே வாங்கி
உபயோகியுங்கள்.
5 துலம் தைலங் கொண்ட புட்டி 1-க்கு ரூ. 1.
ஜெய் ! சேட்லாக். ஜெய் !!
ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்.
26. பிராட்வே, மதராஸ்.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)